வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 04.08.2025 திங்கட்கிழமை | இதழ் : 216 | பக்கங்கள் : 12

# அரியாலை மனித புதைகுழி; இன்று ஸ்கான் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 04

**அரியாலையில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி பகுதிகள் இன்று திங்கட்கிழமை ஸ்கான் பரிசோதனை செய்யப்படவுள்ளன.**

அரியாலை - சித்துப் பாத்தி இந்து மயானத் தில் கண்டறியப்பட்ட இரு மனிதப் புதைகுழி களில் தற்போது அகழ்வு பணிகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. இந்தப் புதைகுழிகளில் இன்றுவரை 130 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட் டுள்ளன. 120 எலும்புக்கூடுகள் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட் டுள்ளன.

இந்த நிலையில், இந்தப் புதைகுழிகளின் அருகே வேறு மனித புதைகுழிகள் இருக்கின்ற னவா என்று ஆராய ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள் ளது.

இதனிடையே, இந்த இரு மனிதப் புதைகுழி களிலும் இருந்து மீட் கப்பட்ட சான்றுப் பொருட்கள் நாளை செவ் வாய்க்கிழமை காட்சிப் படுத்தப்படவுள்ளன. மக்கள் அடையாளம் காணும்விதமாகவே இந்தச் சான்றுப் பொருட் கள் காட்சிப்படுத்தப்பட வுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது.

**பின்னணி**

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் செம்மணி பகுதி யில் முகாம் அமைக்கப் பட்டிருந்தது. 1996ஆம் ஆண்டு மாணவி கிருஷாந்தி

11



அரியாலை புதைகுழி:

## 4 எலும்புக்கூடுகள் நேற்று கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 04

அரியாலை மனிதப் புதைகுழிகளில் நேற்றைய தின மும் 4 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்து டன், 3 எலும்புக்கூடுகள் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன.

அரியாலை - சித்துப்பாத்தி மயானத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இரு மனிதப் புதைகுழிகளில் அகழ்வுப் பணி நடக்கி றது. இரண்டாம் கட்ட அகழ்வில் 29 ஆவது நாளாக நேற்று ஞாயிற்றுக்கிழமையும் அகழ்வு பணி முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது, 4 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக் கப்பட்டன. அத்துடன், 3 எலும்புக்கூடுகள் புதைகுழி களிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இதேசமயம், இந்தப் புதைகுழிகளிலி ருந்து நேற்று வரை 130 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 120 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட் டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேச விசாரணை நடந்தால் சாட்சியமளிப்பதற்கு நான் தயார்

### கிருஷாந்தி கொலை வழக்கில் தண்டனைபெற்ற லான்ஸ் கோப்ரல் சோமரத்ன தெரிவிப்பு!

கொழும்பு, ஓக. 04

செம்மணி மனித புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படும் பட் சத்தில் அதில் சாட்சியம ளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்று கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தில் தீர்ப்பளிக் கப்பட்ட லான்ஸ் கோப் ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார் என்று குறிப்பிட்டு அவ ரின் மனைவி எஸ். சி. விஜயவிக்ரம ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன், 7ஆம் காலணி இராணு வப் படை

11

## கடிதம் கிடைத்த பின்னரே கருத்து

கொழும்பு, ஓக. 04

"சோமரத்ன ராஜபக்ஷ எழுதிய கடிதம் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்ததும் அது பற்றி கருத்துக் கூறுகிறேன் - என்று நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார கூறி யுள்ளார்.

செம்மணி படுகொலை விவகாரத்தில் சர்வ தேச விசாரணை நடத்தினால் தான்

11

## வடக்கு முதலமைச்சராக போட்டியிட விரும்புகிறேன்

### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 04

வடக்கு மாகாண சபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட விரும்புகிறேன் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலா ளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

"இந்த விடயத்தை நான் முறையாக கட்சிக்கு அறி விக்கவுள்ளேன். எனினும், எனது வேட்புமனுவை அங்கீகரிப்பதோ அல்லது நிராகரிப்பதோ கட்சியின் முடிவைப் பொறுத்தது. என்னை விட பொருத்தமான ஒரு வேட்பாளரை முதலமைச்சர் பதவிக்கு கட்சி அடையாளம் கண்டால் கட்சியின் முடிவுக்கு நான் முழுமையாகக் கட்டுப்படுவேன்", என்றும்

11

செம்மணி படுகொலை விவகாரம்:

## சர்வதேச விசாரணைக்கு அநுர உடன்பட வேண்டும்!

### தமிழ் முற்போக்கு கூட்டணி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 04



"செம்மணி படுகொலை வழக்கில் சர்வதேச கண் காணிப்பு, விசாரணைக்கு ஜனா திபதி அநுர உடன்பட வேண் டும். அதிலே, லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ சுதந்திர மாக சாட்சியம் அளிக்க வேண் டும். ஆனால், இவற்றுக்கு முன்னர், இன்று சிறை யில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன

11

## புலம்பெயர் தமிழரை திருப்திப்படுத்தவே மகிந்தவுக்கு நெருக்கடி

### திலும் அமுனுகம கூறுகிறார்

கொழும்பு, ஓக. 04

பிரிவினைவாத கொள்கையுடைய புலம்பெயர் தமிழ் அமைப்புகளை திருப்திப்படுத்தவே மகிந்த ராஜபக்ஷ வை நெருக்கடிக்குள்ளாக்க அரசாங்கம் முயற்சி செய்கி றது. உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து மகிந்த ராஜ பக்ஷவை வெளியேற்றினால் பெரும்பாலான மக்கள் அவருக்கு வீடுகளை வழங்குவார்கள் - என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

11

## ஜனாதிபதிக்கு பாதுகாப்பும் பொழுதுபோக்கும் அவசியம்

### எதிர்க்கட்சி சொல்கிறது

கொழும்பு, ஓக. 04

ஜனாதிபதிக்கு பாதுகாப்பு தேவை. அதே நேரத்தில் அவர் பொழுதுபோக்கையும் அனுபவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஜனாதிபதிக்கு போதுமான பாதுகாப்பு தேவை. இதேநேரத்தில் சில நேரங்களில் அவருக்கு பொழுது போக்கு தேவை. ஒரு ஜனாதிபதி தனது பணியை செய் யும்போது மன அழுத்தத்துக்கு ஆளாகிறார். எனவே, எப்போதும் மன அழுத்தத்தில் வேலை செய்யக்கூடாது என்பதால் அவருக்கு பொழுதுபோக்கு தேவை."

முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் போதுமான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். முன்னாள்

11

## போதைக்கு அடிமையான தம்பதி குருநகரில் கைது

- பு.கஜிந்தன், த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 04

நீண்டகாலமாக ஹெரோயின் போதைப்பொருளை பாவித்த கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டுள் ளனர். அவர்களிடமிருந்து 90 மில்லிகிராம் ஹெரோயி னும் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியான குருநகரைச் சேர்ந்த தம்பதியரே இவ்வாறு நேற்று ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்

11

## வடக்கு கல்வியில் பின்தங்க நிர்வாக சிக்கலே காரணம்

### பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டு

வவுனியா, ஓக. 04

வடக்கு மாகாணத்தில் கல்வி நிலைமை பின்தங்கி யுள்ளமைக்கு நிர்வாக பிரச்னை காரணமாக இருக்கிறது என்று தெரிவித்துள்ள கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய, இது தொடர்பில், விரைவில் கல்வி நிர்வாக அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடி தீர்வு காணவுள்ளேன் என்றும் கூறியுள்ளார்.

வவுனியா மாவட்ட கல்வி நிலைமை மற்றும் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் நேற்று

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 728 துப்பாக்கி ரவைகளுடன் வவுனியாவில் இருவர் கைது

வவுனியா, ஒக. 04

728 துப்பாக்கி ரவைகளுடன் இருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைதானவர்களில் செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினரும் சகோதரர் ஒருவரும் அடங்குவார்.


கடந்த 21ஆம் திகதி கொழும்பில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி வழங்கிய தகவலின் அடிப்படையில் கொழும்பிலிருந்து வந்த புலனாய்வு பிரிவு அதிகாரிகளும் வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு விசாரணை பிரிவினரும் சந்தேகநபர்களை கைது செய்தனர்.

இந்நிலையில், செட்டிகுளம் துட்டுவாகை, நேரியகுளம் பகுதிகளில் உள்ள இரு வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது, நேரியகுளத்தில் வீடு ஒன்றில் 728 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன. அத்துடன், செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினரின் சகோதரர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பில் முன்னாள் போராளி துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டமையை தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# முன்பள்ளி சிறார்களின் புத்தாக்க கண்காட்சி!






வடமராட்சி, ஒக. 04

வடமராட்சி உடுப்பிட்டி தெற்கு இளந்தளிர் முன்பள்ளி மழலைகளின் ஆக்கத்திறன் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட உடுப்பிட்டி விநாயகா முன்பள்ளியின் பொறுப்பாசிரியர் விஜய சிறீ மேனகா கண்காட்சியை நாடா வெட்டி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் என். சுதாகர், வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா நிரோஷ் உள்ளிட்ட விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றினர்.

தொடர்ந்து கண்ணைக் கவரும் மழலைகளின் புத்தாக்கங்களை விருந்தினர்கள் பார்வையிட்டனர். குறிப்பாக, பனைமரம் கற்பகதரு, தன்னியக்க பணமெடுக்கும் இயந்திரம், மிருகக் காட்சிசாலை, நீர் வீழ்ச்சி, அழகான வீடுகள், மருத்துவமனை, மழலைகளின் சிறிய புத்தாக்கங்கள் என பல வகையான வண்ணமயமான ஆக்கங்கள் அனைவரையும் கவர்ந்தன.

பார்வையாளர்களுக்கு தங்களின் கைவினைப் பொருட்கள் தொடர்பில் மழலை மொழியில் சிறார்கள் விளங்கப்படுத்தினர். ஆசிரியர்கள், பெற்றோர்களின் அர்ப்பணிப்பு இந்தக் கண்காட்சியில் பிரதிபலிப்பதாக கண்காட்சியை பார்வையிட்டவர்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். (ஐ)

# சமஷ்டி அதிகாரத்தை வலியுறுத்தி முல்லைத்தீவில் நேற்று போராட்டம்

முல்லைத்தீவு, ஒக. 04

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வேண்டும் என்று கோரி கவனவீர்ப்பு போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு - சிலாவத்தையில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ச்சியாக 100 நாட்கள் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் கவனவீர்ப்பு போராட்டங்களை நடத்தும் திட்டத்துக்கு அமைய இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சமஷ்டியை வலியுறுத்திய கோரிக்கைகளை முன்வைத்து போராட்டக்காரர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர். போராட்டத்தின் இறுதியில் கோரிக்கை மனுவும் வாசிக்கப்பட்டது. (ஐ)

# நல்லூர் கந்தன் ஆலயத்தில் பிரதமர் ஹரிணி வழிபாடு!



யாழ்ப்பாணம், ஒக. 04

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்றைய தினம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். இதன்போது, அவர் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருந்தார்.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு சென்று வழிபாட் டில் ஈடுபட்டார். நேற்றைய தினம் ஆலயத்தின் பெருந்திருவிழாவில் 6ஆவது தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரதமர் ஆலயத்துக்கு சென்றபோது, அவரின் கட்சியை சேர்ந்த யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியினர் எனப் பலர் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03-05)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 02

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இசையரங்கு நிகழ்ச்சியில், கருணாகரன் தசாணனின் பாட்டு இடம்பெறும். வயலின் - குமரேசன் சயந்தன், மிருதங்கம் - சேதிலிங்கம் சிவஜெனன், கெஞ்சிரா சிவானந்தம் நித்தியானந்தம் ஆகியோர் வழங்குவர்.

குழலிசை நிகழ்ச்சியில் புல்லாங்குழல் - குணராஜா நக்கீரன், வயலின் - இராசரத்தினம் நிறோசன், மிருதங்கம் - நக்கீரன் கேதாரநாத், கடம் சிறீதர் நிதர்சன், முகர்சிங் - நித்தியானந்தம் மோகனதர்சன் ஆகியோர் இசைப்பர். (ஐ)

# 'தேடிவந்த கயிலை' சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக. 04

குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ பெருந்திருவிழாவில் இன்று திங்கட்கிழமை சைவப் புலவர் செ. த. குமரன் "தேடி வந்த கயிலை" என்னும் விடயப்பொருளில் சொற்பொழி வாற்றவுள்ளார். (எ)

# உதைபந்தாட்ட போட்டியின் அறிவிப்பாளர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக. 04

குருநகரில் நடந்த உதைபந்தாட்ட போட்டியில் அறிவிப்பாளராக பங்கேற்ற ஒருவர்மீது கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்த சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்கு உள்ளான நபர் கூறுகையில்,

"உதைப்பந்தாட்ட போட்டியில் அறிவிப்பாளராக கடமையாற்றி விட்டு வெளியேறிய போது, குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் தலைமையில். வெளிநாட்டில் இருந்து வந்திருந்த நபர் உள்ளிட்ட கும்பல் என் மீது மூர்க்க தனமாக தாக்குதல் நடத்தியதுடன், நான் அணிந்திருந்த 'பாடும் மீன்' விளையாட்டு கழகத்தின் உத்தியோக பூர்வ ஆடையையும் கிழித்துள்ளார்கள்.

இது தொடர்பில், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டு என் மீது தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் - என்று கூறினார். (ஐ-03-05)

# 'இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கான நடமாடும் சேவை' 14ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 04

ஜனாதிபதியின் எண்ணக்கருவான கிளீன் சிறீலங்கா செயல்திட்டத்தின் ஓர் அங்கமாக 'இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு - ஒற்றுமையின் தூய்மையான பயணம்' எனும் கருப்பொருளிலான நடமாடும் சேவை எதிர்வரும் 14 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் - பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் 15 ஆம் திகதி உடுவில், தெல்லிப்பழை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் உடுவில் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் ஆட்பதிவுச் சேவை, பிறப்பு - இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவைகள், ஓய்வூதியச் சேவைகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சேவைகள், மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதார சேவைகள் - கண் பரிசோதனை மற்றும் மருத்துவ சேவைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், வடக்கு மாகாணத்தின் சகல அமைச்சுக்குரிய சேவைகள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சேவைகள் உள்ளிட்ட சேவைகள் நடைபெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவைக்கான முன்னாயத்த ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்துக்கும், உடுவில் பிரதேச செயலகத்துக்கும் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி ஆகியோர் சகிதம் சென்று உரிய முன்னாயத்த அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 04.08.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் அரசு கட்சியின் முடிவு

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் ஐந்து கட்சிகளின் கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் புதிய கூட்டணியான தமிழ்த் தேசியப் பேரவை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான கடிதத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கையெழுத்திட மறுத்துவிட்டது. இந்த அடிப்படையில் தமிழ் அரசுக் கட்சி ஒற்றுமைக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கிறது என்பதான விமர்சனத்தை முன்வைத்து வருகிறது. இது சரியான விமர்சனமா?

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒப்பீட்டடிப்படையில் வடக்கு, கிழக்கின் பிரதான தமிழ் கட்சி. வடக்கு, கிழக்கு என்று நோக்கும் போது தமிழ் மக்கள் மத்தியில் வாக்கு பலமுள்ள ஒரேயொரு கட்சி. இந்த அடிப்படையில் நோக்கினால், ஜனநாயக ரீதியாக தமிழ் அரசுக் கட்சியே முதன்மையான மக்கள் ஆணையைப் பெற்றிருக்கும் கட்சியாகும். ஒரு கட்சிக்கான மக்கள் ஆணையின் அடிப்படையில் தான் அந்தக் கட்சி வெளியாரால் நோக்கப்படும். தவிர, ஒரு கூட்டணியில் எத்தனை கட்சிகள் இருக்கின்றன என்னும் அடிப்படையில் ஜனநாயகம் நோக்கப்படுவதில்லை.

இந்த அடிப்படையில் நோக்கினால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை தவிர்த்துவிட்டு மேற்கொள்ளப்படும் விடயங்கள் வெளித் தரப்புகள் மத்தியில் முக்கியமாக நோக்கப்படப் போவதில்லை. அத்துடன், பெருவாரியான மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கும் கட்சியின் பங்குபற்றல் இல்லாமல் ஒரு விடயம் மேற்கொள்ளப்படும்போது, தமிழ் மக்கள் மத்தியிலிருக்கும் பிளவே பிரதானமாக நோக்கப்படும். இந்த அடிப்படையில் நோக்கினால் தமிழ் அரசுக் கட்சியின் பங்குபற்றல் இல்லாமல் ஒரு விடயத்தை மேற்கொள்வதைவிட அதனைச் செய்யாமல் விடுவது மேலானது. ஏனெனில், பிளவு இருப்பதான தோற்றத்தையாவது இல்லாமலாக்கலாம்.

தமிழ்த் தேசியப் பேரவையின் கடித விவகாரத்தைப் பொறுத்த வரையில் கடிதத் தயாரிப்பில் காண்பிக்கப்பட்ட அணுகுமுறை தவறானது. ஏனெனில், பெருவாரியான மக்கள் ஆணையைப் பெற்றிருக்கும் ஒரு பிரதான கட்சியிடம் கடிதம் தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அதனுடன் மற்றவர்கள் இணைந்து பயணிக்கும் முடிவை மேற்கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு அணுகப்பட்டிருந்தால் தமிழ் அரசுக் கட்சி இதிலிருந்து விலகிநிற்க முடியாது போயிருக்கும் - அவர்களும் விலகி நிற்க விரும்பியிருக்கவும் மாட்டார்கள்.

தனித்துக் கடிதங்களை எழுதுவதில் வித்துவத்தைக் காண்பிப்பதால் அதிசயங்கள் எதுவும் நடந்துவிடப் போவதுமில்லை. ஆனால், இங்கு கடிதத்தைத் தயாரித்துவிட்டு, அதில் கையெழுத்திடுங்கள் என்று கூறும்போது பிரதான கட்சி என்னும் வகையில் தமிழ் அரசு கட்சியின் தயக்கம் புரிந்து கொள்ளத்தக்கதே. அத்துடன், ஒரு பரந்தளவிலான அரசியல் கூட்டுக்கான உடன்பாடும் இன்னும் ஏற்படவில்லை. அதற்கிடையில், இவ்வாறான விடயங்களில் அவசரப்பட்டு செயல்பட்டால் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். தற்போது, அதுதான் நடந்திருக்கிறது. யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட ஒரு கடிதத்தை அனைத்துக் கட்சிகளுமாக இணைந்து தயாரிக்க முடியாமல் இருக்கிறது என்பதுதான் தமிழர் அரசியலின் கையறுநிலையாகும்.

# வடக்கில் 70இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்படலாம்!

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 04

கல்விப் பின்புலம் என்பது யாழ்ப்பாணத்துக்கு தனித்துவமான கலாசாரத்தை கொண்ட விடயமாகும். தனித்துவமான கலாசாரத்தை கொண்ட விடயமாக இருந்த போதும் இன்று கல்வி பாரிய சவாலுக்கு உட்பட்டுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் 982 பாடசாலைகள் காணப்படும் நிலையில் அவற்றில் 70 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்விச் சீர்திருத்தம் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் எட்டாவது அமர்வு பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

"கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றத்தில் வெளியிட்டுள்ள அறிவிப்பில், கல்வி மறுசீரமைப்பு ஏன் தேவை என்பது தொடர்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

அதில் கல்வியின் நிலைமை, பாடசாலையின் நிலைமை, அவற்றின் மூலம் ஏற்படவுள்ள மாற்றம் என்ன என்பது தொடர்பாகவும் குறிப்பிட்டு கல்வி சீர்திருத்தம் முக்கிய தேவையனெ தெளிவாக வலியுறுத்தியிருந்தார்.

அதுபோலவே எமது அரசாங்கத்தின் நோக்கமும் அதுவாகவே இருக்கிறது. கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம், வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம், நாட்டை டிஜிற்றல் மயமாக்கல் போன்ற பிரதான வேலைத் திட்டங்களை கொண்டுள்ளது.

அதில் வறுமை ஒழிப்பு தொடர்பான வேலைத்திட்டத்துக்கு கூடுதலான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதில் வடக்கு மாகாணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஆளுநர் மற்றும் உலக வங்கி பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் வட மாகாணத்தை விசேடமாக கவனத்தில் கொண்டனர். வட மாகாணமே இலங்கையில் அதிக வறுமைக்கு உட்பட்ட பிரதேசமாக இருக்கிறது.

இலங்கையில் வறுமையான மாவட்டமாக மொனராகலை மாவட்டம் இருந்த நிலையில் தற்போது அது முல்லைத்தீவு மாவட்டமாக மாறியிருக்கிறது.

இதனால் வறுமையுடன் இணைத்து கல்வி தொடர்பான பிரச்சினையையும் அணுக வேண்டியுள்ளது. வறுமையிருக்கும் இடங்களெல்லாம் கல்வி பிரச்னையும் காணப்படுகிறது. கல்வியில் பின்னடைவை சந்தித்துள்ள இடங்களில் வறுமை அதிகரித்துள்ளது.

மேலும் சமூக சீரழிவுகள், குற்றசெயல்கள் அதிகரித்து காணப்படுகிறது. இன்று யாழ் மாவட்டத்திலும் இந்த சவால்கள் காணப்படுகிறது. இந்த சவால்களில் இருந்து மீண்டு புதிய யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது.

இதனால் எமது அரசாங்கத்தில் கல்விக்கே அதிக முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கை பின்பற்றப்படுகின்றது. இதற்கமைவாகவே கல்விப் புலத்தை வெளிப்படுத்தி கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு கல்வி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வட மாகாணத்தில் 982 பாடசாலைகள் காணப்படும் நிலையில் அவற்றில் 70 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

10 பிள்ளைகள் கல்வி கற்கும் 35 பாடசாலைகள் காணப்படுவதாகவும் 11 - 20 பிள்ளைகள் கல்வி கற்கும் 64 பாடசாலைகளும் 20 - 50 பிள்ளைகள் கற்கும் 171 பாடசாலைகள் இருப்பதாகவும் 50 - 100 பிள்ளைகள் கற்கும் 174 பாடசாலைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 40 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் எவ்வித கல்வி நடவடிக்கைகளும் முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதனால் எமது கல்வியில் மறுசீரமைப்பு தேவை என்பது உணரப்படுகின்றது. இது தொடர்பில் அனைவரும் புரிதலுடன் செயற்பட்டால் சமூகத்துக்கு நல்ல செய்தியை கொண்டு செல்லமுடியுமென எதிர்பார்க்கிறேன்" - என்றார். (அ-எ)

## நல்லை ஆதீனத்தில் தெய்வீகக் கலை அர்ச்சனை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 04

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்திவரும் 'தெய்வீகக் கலை அர்ச்சனை' நிகழ்வு இன்றும் நடைபெறவுள்ளது. அந்த வகையில் இன்று திங்கட்கிழமை நவாலியூர் கதிர்காம முருகன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் பால சுப்பிரமணியம் ஹன்ஸ் குகனின் பக்தி இசை நிகழ்வும் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 04 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 19
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகாதசி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள்.

**இடபம்**
மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் அனுகூலம் உண்டு. மின்னணு மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வீடுமனை வாங்குவது விற்பது லாபகரமாக முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**கடகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். எளிதில் செரிமானம் ஆகக் கூடிய உணவுகளை உட்கொள்ளுங்கள். யோகா தியானத்தில் மனம் லயிக்கும்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
புதிய முயற்சிகள் வெற்றியடையும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பிரபலங்களை சரியாக பயன்படுத்திக்கொள்வீர்கள். அரசு காரியங்கள் வெற்றியடையும். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். முக்கியமுடிவுகள் எடுப்பீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சோர்வு களைப்பு வந்து நீங்கும். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் போது கவனம் தேவை. வேலைச்சுமை அதிகரிக்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களால் பிரச்னைகள் வந்து செல்லும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். விருந்தினர்வருகை உண்டு. வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள்.

**கும்பம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள்.

# நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 04

நல்லூர் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழுவினால் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 06 ஆம் திகதி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் காலை 09.00 மணிக்கு நடை பெறவுள்ளது.

இவ்விழாவில் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய தோடல்லாமல் எமது சமூகத்துக்கும் பலவிதத்தில் பணியாற்றிய பெருந் தகை ஒருவரை இனம் கண்டு கௌரவித்து "யாழ்விருது" வழங்கும் வழ மைக்கேற்ப இவ்வருடம் சைவத்துக்கும் தமிழ்ச் சமூகத் துக்கும் பெரும் பணி யாற்றிய துடன் நில்லாது பல சமூகப்ப ணிகளை தற்போதும் மேற்கொள் ளும் கோப்பாய் ஆசிரியர் கலா சாலை ஓய்வு நிலை விரிவுரை யாளர் சின்னத்தம்பி குணசீல னுக்கு யாழ்விருதை வழங்கிக் கௌரவிப்பதென சைவ சமய விவகாரக் குழுவால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# நாசவேலைகளில் ஈடுபடுவதை பொறுத்துக்கொள்ள முடியாது!

## வவுனியா பல்கலைக்கழகத்தில் நூலகத்தை திறந்து வைத்து பிரதமர் ஹரிணி உரை

வவுனியா, ஓக. 04

பல்கலைக்கழக மாணவர்கள் வன்முறை அல்லது நாச வேலைகளில் ஈடுபடுவதை பொறுத்துக்கொள்ள முடியாது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தில் புதிய நூலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.



இதனையடுத்து பல்கலைக் கழகத்தின் நிர்வாக அதிகாரிகள் மற்றும் மாணவர்களுடன் பிரதமர் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் சவால்கள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதமர்,


"பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபடவோ அல்லது அரசியலில் ஈடுபடுவதற்கோ எந்தத் தடையும் இல்லை. இருப்பினும், வன்முறை அல்லது நாசவேலைகளில் ஈடுபடுவதை பொறுத்துக் கொள்ள முடியாது. அத்துடன் பல்கலைக்கழகங்களை வெறும் பட்டம் வழங்கும் அமைப்புகளாக அல்லாமல், ஆராய்ச்சி சார்ந்த நிறுவனங்களாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம்"- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ம. ஜெகதீஸ்வரன், செ. திலகநாதன் மற்றும் துணைவேந்தர் அ. அற்புதராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர். (எ-10)

# வல்வைப் படுகொலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஓக. 04

இந்திய இராணுவத்தால் 1989ஆம் ஆண்டு வல்வெட் டித்துறையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வல்வை கடற்கரையில் நடை பெற்றது. இதில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (எ)



# ஊழல் மற்றும் அரச துறை தாமதங்களுக்கு எதிராக எப்படி உரிமையை பயன்படுத்தலாம்

## யாழில் விழிப்புணர்வு செயல்திட்டம்





யாழ்ப்பாணம், ஓக. 04

கிராம மக்கள் அரசாங்கத்திடமிருந்து தகவல்களை எவ்வாறு பெறலாம். ஊழல் மற்றும் அரச துறைத் தாமதங்களுக்கு எதிராக எப்படி உரிமையைப் பயன்படுத்தலாம். தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்றால் என்ன? கேள்வி கேட்கும் உரிமை மக்களுக்கு உண்டு - அதிகாரிகள் பதிலளிக்க வேண்டும். இவ்வாறான விழிப்புணர்வு செயல்திட்டம் குரும்பசிட்டி பொது நோக்கு மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி

ஐ. எம். சி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில், வடமாகாண தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் எஸ். தினேஷ், மக்களுக்கான விழிப்புணர்வை நடத்தியிருந்தார். மருத்துவர் வெற்றிவேல் நாகநாதன், வலி. வடக்கு பிரதேச சபை உபதவிசாளர் பொன்னுத்துர தங்கராஜா, சட்டத்தரணியும் ஐ. எம். சி. ஆலோசகருமான ஜெயராசா மதுரா மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபோக அறுவடை ஆரம்பம்

# நெல்லுக்கான விலை நிர்ணயிக்கப்படவில்லை

கொழும்பு, ஒக. 04

தற்போது சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நெல்லுக்கான உரிய விலை நிர்ணயிக்கப்படவில்லை என்று விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதனால் எம்மால் இலாபம் பெற முடியவில்லை. இதேசமயம், நாட்டில் தற்போது மரக்கறிகளின் விலை குறைவடைந்துள்ளமையால் தாம் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகிறோம். பூசணிக்காய் ஒரு கிலோகிராம் 35 ரூபாய் முதல் 40 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது - என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, விவசாயிகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படும். அதற்காக கால அவகாசம் தருமாறு விவசாய அமைச்சர் கே.டி லால் காந்த கேட்டுள்ளார். (ஐ)

அமெரிக்க தீர்வை வரி குறைப்பு

# ஆசிய நாடுகளுடனான போட்டி குறித்து கவனம் செலுத்துங்கள்

## சமூக நீதிக்கான அமைப்பு அறிவுறுத்து

கொழும்பு, ஒக. 04

**அமெரிக்கா இலங்கைக்கு 20 வீதமாக வரியை குறைத்த போதிலும் அந்த நாட்டுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது ஆசிய நாடுகளுக்கு மத்தியில் உருவாகக்கூடிய போட்டித்தன்மை தொடர்பில் கவனம் செலுத்தி, நாடு என்ற ரீதியில் ஒருமித்து செயலாற்றி சவால்களை வெற்றி கொள்ளவேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுகுறித்து முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் இலங்கைக்கான தீர்வை வரி 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதனை நாட்டின் தற்போதைய நிலவரத்தைக் கருத்தில் கொண்டு நோக்குகையில் குறிப்பிடத்தக்களவு நிவாரணமாகக் கருதமுடியும். இருப்பினும் வருங்காலங்களில் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது ஆசிய நாடுகளுக்கு மத்தியில் உருவாகக்கூடிய போட்டித்தன்மை தொடர்பில் கவனம் செலுத்தி, நாடு என்ற ரீதியில் ஒருமித்து இயங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இது விடயத்தில் வருங்காலங்களில் ஏற்படக்கூடிய சவால்களின்போது ஒருமித்துக் கலந்துரையாடி, தீர்வுக்கான திட்டங்களைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திடமும், பொருளாதாரத்துடன் தொடர்புடைய கொள்கைகளை வகுக்கும் தரப்பினரிடமும் தனியார் துறையினரிடமும் கேட்டுக்கொள்கிறோம்.

துறைமுகங்கள் பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய துறைகளால் அடிக்கடி முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டங்களால் நாட்டின் உற்பத்தித் துறை மிகமோசமான சவாலுக்கு முகம் கொடுத்திருக்கிறது. எனவே, நாம் எம்முடன் போட்டியிடும் நிலையில் உள்ள ஏனைய ஆசிய நாடுகளின் உற்பத்தி நிலவரம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டும். இதனை அடிப்படையாகக்கொண்ட புதிய நிலைமாற்றமொன்றுக்குள் பிரவேசிக்காமல், நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரம் தற்போது முகங்கொடுத்திருக்கும் தீவிர சவாலை வெற்றி கொள்ளமுடியாது - என்றுள்ளது. (ஐ)

# ஒருவரை சுட்டுக் கொன்றுவிட்டு பொலிஸில் சரணடைந்த நபர்!

கொழும்பு, ஒக. 04

வயல் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து ஒருவரை சுட்டுக் கொன்றவர் துப்பாக்கியுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

அம்பாந்தோட்டை - அம்பலாந்தோட்டை - ஹுங்கம பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட துப்பாக்கி பயன்படுத்தப்பட்டது என்று தெரிய வருகிறது.

துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# மைத்திரி - ரணில் சந்திப்பு

கொழும்பு, ஒக. 04

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நீக்குவதற்கான யோசனை வெளியிடப்பட்டுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதிகளான - ரணில் விக்ரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இந்த சந்திப்பின்போது, சலுகைகள் நீக்க யோசனையை உயர் நீதிமன்றத்தில் சவால் செய்வதற்கான சாத்தியம் குறித்து அவர்கள் பேசினர் என்று தெரிய வருகிறது.

முன்னதாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட யோசனையின் கீழ், அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் உத்தியோகபூர்வ குடியிருப்பு, செயலக கொடுப்பனவுக்கான கட்டணம் மற்றும் உத்தியோகபூர்வ போக்குவரத்துகள் இரத்தாகும். அத்துடன், முன்னாள் ஜனாதிபதிகள் 97 ஆயிரத்து 500 ரூபாய் என்ற மாதாந்த ஓய்வூதியத்தை மட்டுமே பெறுவார்கள் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதாள குழு உறுப்பினர் கைது

கொழும்பு, ஒக. 04

பாதாள உலகக் குழுவை சேர்ந்த கெஹெல்பத்தர பத்மேவுக்கு நெருக்கமானவர் எனக் கூறப்படும் 'கம்பஹா தேவா' என்று அழைக்கப்படும் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்துக்கு தப்பிச் செல்ல முயன்றபோது கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டார் என்று அறிய வருகிறது. (ஐ)

# நுவரெலியாவில் கனமழை போக்குவரத்தும் பாதிப்பு!



நுவரெலியா, ஒக. 04

நுவரெலியாவில் நேற்று காலை முதல் பெய்த கடும் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதனால், உடப்புசல்லாவ பிரதான வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதில் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்தப் பகுதியில் கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கல்வியியல் பட்டதாரிகளின் பணி வாய்ப்பை அரசு வேண்டுமென்று காலம் தாழ்த்துகிறது!

## பட்டதாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 04

ஆசிரியர் சேவைக்காக கல்வியியல் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையை அரசாங்கம் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருகிறது. இந்தப் பிரச்னைக்கு விரைவாக தீர்வு காணாவிட்டால் அடுத்தகட்ட நடவடிக்கையை எடுப்போம் என்று பல்கலைக்கழக கல்வியியல் பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அந்த சங்கத்தின் பேச்சாளர் இசுறு லக்ருவன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஆசிரியர் சேவைக்காக கல்வியியல் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையை அரசாங்கம் வேண்டுமென்று காலம் தாழ்த்தி வருகிறது. இந்த விடயத்தை ஒவ்வொரு மாகாண சபையிலும் பல்வேறு காரணங்களை தெரிவித்து காலம் கடத்தி வருதுடன் பிரதமருக்கும் கல்வி அமைச்சுக்கும் இது தொடர்பான விடயங் களை எடுத்துக்கூறியபோதும் அவர்கள் இதுதொடர்பில் எந்த பதிலையும் தெரிவிப்ப தில்லை. அதற்கு பதிலாக அமைச்சரவையின் தீர்மானமென தெரிவித்து இணைத்துக்கொள்வது நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 26ஆம் திகதி தென் மாகாண சபை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ள தயாராகி இருந்த போதும், 25ஆம் திகதி, அமைச்சரவை தீர்மானம் என தெரிவித்து நியமனம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் மாத்திரம் இரண்டு வருடங்களுக்கான பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கும் நடவடிக்கை இடம்பெற்றது.

கல்வியியல் பட்டதாரிகள் என்பவர்கள் ஆசிரியர் தொழிலுக்காக தத்துவார்த்த மற்றும் நடைமுறைப் பயிற்சியைப் பெற்ற தொழில்முறை பட்டதாரிகள் ஆவர். அவர்களை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்வதை தாமதப்படுத்துவதால், அவர்கள் வேறு தொழில்களின்பால் பயணிப்பதுடன் அவர்கள் இந்தத் துறைக்கு இல்லாமல் போய்விடுகின்றனர். தொடர்ந்து இது இடம்பெறுமாக இருந்தால், இதன் பின்னர் கல்வியியல் பட்டத்தை படிப்பதற்கு மாணவர்கள் வருவார்களா என சிந்திக்க முடியாமல் இருப்பதுடன் கல்விப்பீடத்தை மூடிவிட வேண்டிவரும். எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிடாவிட்டால், அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் - என்றார். (ஐ)

# டிஜிற்றல் பரிவர்த்தனையின் பயன்பாடு குறைவாகவுள்ளது

## மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஒக. 04

நாட்டில் டிஜிற்றல் பரிவர்த்தனைகள் தொடர்பான உள்கட்டமைப்புகள் முழுமையாக இருப்பினும் அதன் பயன்பாடு குறைவாக உள்ளது என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் நடைபெற்ற மத்திய வங்கியின் டிஜிற்றல் பரிவர்த்தனை ஊக்குவிப்பு நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேல் மாகாணத்துக்கு வெளியே செல்லும்போது, கிராமபுறங்களில் பலர் இன்னும் பணத்தையே பயன்படுத்த பழகிவிட்டனர். அதுவே வசதியானது எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

எனினும், ஒரு வணிகருக்கும், நுகர்வோருக்கும் இந்தப் பணப் பயன்பாட்டில் உண்மையில் கூடுதல் நேரத்தையும் பணத்தையும் செலவழிக்க வேண்டி ஏற்படுகிறது.

வங்கி அமைப்பு, நிதி நிறுவனங்கள் இதுபோன்ற கிராமங்களுக்குச் சென்று டிஜிற்றல் பரிவர்த்தனைகளை ஊக்குவிக்க வேண்டும். டிஜிற்றல் பரிவர்த்தனைகள், எந்தவித வரி அபாயங்களுக்கும் உட்படமாட்டாது - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகை நீக்கத்துக்கு ஆதரவு

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 04

**முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமை, சலுகைகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தை நிறைவேற்ற பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். எனினும், சகல முன்னாள் ஜனாதிபதிகளினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள், சலுகைகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட மூலம் தொடர்பில் தற்போது சமூகத்தில் பரவலாக பேசப்படுகிறது.

தர்மத்தின் அடிப்படையில் இந்த சட்டமூலம் சரியானது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரச செலவில் வாழ்நாள் முழுவதும் சலுகைகள் வழங்கப்படுவது சமூகத்தில் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. நாட்டை விட்டு தப்பிச் சென்ற கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இந்த சிறப்புரிமைகளும் சலுகைகளும் கிடைக்கின்றன. வெறும் இரண்டரை ஆண்டுகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவரும் இந்த சலுகைகளை அனுபவிக்கின்றார். நாட்டை முறையாக நிர்வகிக்காதவர்கள் இந்த சலுகைகளை அனுபவிப்பதை எண்ணி மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

எனவே, இவ்வாறானவர்களுக்கான சலுகைகளை நீக்குவதற்கு நிச்சயம் சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஆனால், அந்த சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் முறையான பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இன்று சகல பகுதிகளிலும் பொலிஸாரின் கட்டுப்பாட்டை மீறி பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகள் தலைதூக்கியுள்ளன. மறுபுறம், அவ்வப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கைகளும் மேலெழுகின்றன. இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

அரசமைப்பிலுள்ள உள்ளடக்கங்களின் அடிப்படையில் இவ்வாறானதொரு சட்ட மூலத்தை நிறைவேற்ற முடியுமா என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது. எமது நாட்டு சட்டத்துக்கமைய அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளாமல் அதற்கு முரணாக சட்டங்களை நிறைவேற்ற முடியும். ஆனால், அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். சில சந்தர்ப்பங்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அப்பால் சர்வசன வாக்கெடுப்பும் அவசியம். தற்போதைய அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதால் அரசாங்கத்தால் எந்தவொரு சட்டத்தையும் இலகுவாக நிறைவேற்ற முடியும்.

இந்த விவகாரம் தொடர்பில் மக்கள் மத்தியில் வரவேற்பு இருப்பதால் உயர் நீதிமன்றம் சர்வசன வாக்கெடுப்புக்கு உத்தரவிட்டாலும் அதனை நடத்தி வெற்றி பெறக்கூடிய சூழலும் காணப்படுகிறது. எனவே இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான நடைமுறை சாத்தியமான இயலுமை அரசாங்கத்துக்கு இருக்கிறது. இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் - என்றார். (ஐ)

# போதைப்பொருள் விற்ற சீன நாட்டவர் கைதானார்

கொழும்பு, ஓக. 04

இரவுநேர களியாட்ட விடுதிகள், கசினோ விடுதிகளில் சீன பிரஜைகளுக்கு போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்த பிரதான வர்த்தகரை தாம் கைது செய்துள்ளனர் என்று கொழும்பு தெற்கு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதானவர் சீனர் என்றும். அவர் கொழும்பு - பம்பலப்பிட்டியில் நீண்டகாலம் வசித்து வந்திருந்தார் என்றும் கூறப்பட்டது.

இந்தக் கைதின்போது, சந்தேகநபரிடமிருந்து 50 கிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

மாலைதீவு, இலங்கையரிடமிருந்து போதைப்பொருட்களை பெற்று சந்தேகநபர் அவற்றை சீனர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளார். இவர், 2019ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து சட்டவிரோதமாக தங்கியிருந்தார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# தென்னக்கோனை பதவி நீக்கும் தீர்மானம் நாளை பாராளுமன்றில்

கொழும்பு, ஓக. 04

இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த பிரேரணை நாளை பாராளுமன்றில் விவாதிக்கப்பட்டு, பிற்பகல் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

அண்மையில், கூடிய பாராளுமன்ற குழுவில் இந்த விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னகோன் அதிகார துஷ்பிரயோகம், பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டார் என்று அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன. இதையடுத்தே அவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 122,766 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஓக 04

கடந்த 7 மாதங்களில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 766 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, ஆயிரத்து 398 கிலோகிராம் மற்றும் 499 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 45 ஆயிரத்து 111 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேபோன்று, 930 கிலோகிராம் ஹெரோயினுடன் 37 ஆயிரத்து 251 சந்தேக நபர்களும் 11 ஆயிரத்து 438 கிலோகிராம் கஞ்சாவுடன் 40 ஆயிரத்து 404 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# படகு கவிழ்ந்தது

கொழும்பு, ஓக. 04

மீன்பிடி படகு ஒன்று கடலில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது. அதிலிருந்த 3 மீனவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

களுத்துறை - வாத்துவ - பொதுப்பிட்டியில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தையடுத்து அருகில் நின்ற வேறொரு மீன்பிடி படகு கவிழ்ந்த படகிலிருந்த மூவரையும் பாதுகாப்பாக மீட்டனர். (ஐ)

# மலையகத்தவர்களுக்கான வீட்டு திட்டம் விரைவாகும்!

## இந்தியத் தூதுவர் உறுதியளிப்பு



கொழும்பு, ஓக. 04

மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டங்களை மிக விரைவில் நிறைவு செய்வதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைகக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படும் என்றும் இந்தியத் தூதுவர் இதன்போது கூறினார்.

மேலும், டிக்கோயா கிளங்கன் ஆதார மருத்துவமனைக்கான புதிய கட்டடம் ஒன்று இந்திய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக் கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மதுபோதையில் பஸ்ஸை செலுத்திய சாரதி கைது!

கொழும்பு, ஓக. 04

மதுபோதையில் பயணிகள் பேருந்தை செலுத்திய இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திவுலபிட்டி டிப்போக்கு சொந்தமான குறித்த பேருந்து வெலிமடையிலிருந்து நுவரெலியா வழியாக மீகமுவ நோக்கி பயணித்த இ. போ. ச. பேருந்தின் சாரதியே நுவரெலியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சாரதியின் நடத்தை குறித்து பேருந்தில் பயணித்தவர்கள் வழங்கிய தகவலை தொடர்ந்து பொலிஸார் சோதனை நடத்தினர். இதன்போதே சாரதி மது போதையில் இருந்தமை தெரியவந்தது. இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஓக. 04

மாத்தறையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்களில் மாத்தறை - கபுகம பகுதிக்கு வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றனர்.

காயமடைந்த 48 வயதுடைய நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# எம். பிக்களின் ஓய்வூதியம் இரத்து ஜே. வி. பி. கட்சிக்குள்ளும் எதிர்ப்பு!

கொழும்பு, ஓக. 04

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை இரத்து செய்யும் தீர்மானம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி.) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது சமூக வலைத்தளத்தில் இட்ட பதிவில்,

"1990களின் முற்பகுதியில் எனது பல்கலைக்கழகக் கல்வியைத் துறந்து, முழுநேரமாக கட்சியின் தலைமறைவு போராட்டத்தில் இணைந்து, நிலையற்ற அரசியல் சகாப்தத்தில் ஆயுதங்களை ஏந்தினேன்.

நிலையான வருமானம் இல்லாமல் பல ஆண்டுகள் கழித்ததுடன் சக தோழர்களுக்கான சட்ட மற்றும் மருத்துவ செலவுகளை ஈடுகட்ட எனது குடும்ப வீடு உட்பட தனிப்பட்ட சொத்துகளைப் பயன்படுத்தினேன்.

தற்போது எனக்கு 63 வயதாகிறது. ரூ. 68 ஆயிரம் மாதாந்த ஓய்வூதியத்தில் மட்டுமே நான் உயிர் வாழ்கிறேன்.

வாடகை, நீர், மின்கட்டணங்கள், மருத்துவ செலவுகளை செலுத்திய பின்னர், உணவு மற்றும் பிற செலவுகளுக்கு நாளொன்றுக்கு ரூ.700-800 மட்டுமே எஞ்சுகிறது.

என்னைப் போன்றே, ஜே. வி.பி., சிறீ லங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவதிப்படுகிறார்கள். எனது சொத்துக்களை விற்று என் அன்றாட ஊதியத்தில் வாழ முடியாது. நான் விரும்பினால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் என்னால் தாங்கிக்கொள்ள முடியும்.

இந்த வயதில் எனக்கு எவரும் வேலை கொடுக்க மாட்டார்கள். நான் வியாபாரம் செய்ய என் எலும்புகளை உடைக்க வேண்டும். இறுதியில், நான் யாசகம் பெறுவேன். நான் அப்படி வாழ விரும்பவில்லை.

நான் ஒரு கொரில்லா போராளி. நான் ரில்வின்போல முழுப் போரின்போதும் சிறையில் இருந்தவன் அல்ல. நான் போரில் இருந்தேன். நான் இறக்கத் தயாராக இருக்கிறேன். நாங்கள் மிகவும் கடினமான நேரத்தில் உண்மையாக எதிர்த்துப் போராடியவர்கள் - என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக, பொது அமைப்புகள் பலவும் ஜே.வி.பி. மயமாக்கப்படுகின்றன!

## இது நாட்டுக்கு ஆபத்து என்கிறார் சஜித்



கொழும்பு, ஒக. 04

**நாட்டில் மிகவும் ஆபத்தான சூழ்நிலை எழுகிறது. சமூகத்தில் காணப்படும் சகல நிறுவனங்கள், அமைப்புகள், சிவில் அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் ஜே. வி. பி. மயமாக்கலுக்கு ஆளாகி வருகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

இளைஞர் கழகங்கள், பிரதேச இளைஞர் சம்மேளனங்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பனவற்றை ஜே. வி. பியின் அரசியல் கைப்பாவைகளாக மாற்ற பல உபாய ரீதியிலான செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கு தமது நெருங்கியவர்களை நியமித்து ஜே. வி. பியின் அரசியல் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

பிரதேச மருத்துவமனை குழுக்கள்கூட தற்போது ஜே. வி. பி. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் அரசியல் தலைமீட்டுக்கு உள்ளாகி வருகின்றன. எதிர்காலத்தில், ஜனநாயகத்தை ஒருபுறம் தூக்கி வீசிவிட்டு கிராமிய அபிவிருத்தி சங்கம், சமூக அபிவிருத்தி சங்கம், மகளிர் சங்கங்கள், மரண சங்கங்கள், ஓய்வூதிய தாரர் சங்கங்கள் போன்றவற்றில் பதவிகளை மக்கள் விடுதலை முன்னணியினர் பகிர்ந்து கொள்வர்.

விவசாயிகள் சங்கங்கள், மீனவர்கள் சங்கங்கள், தேயிலை சங்கங்கள், இறப்பர் சங்கங்கள், ஏற்றுமதி பயிர்ச் செய்கைகளில் ஈடுபவோர்களின் சங்கங்கள் என இது வியாபித்து, விகாரைகளில் விகாராதிபதிக ளாக யார் இருக்க வேண்டும் என்பதையும் இந்த மக்கள் விடுதலை முன்னணியினரே தீர்மானிக்கும் நிலை ஏற்படுமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்தப் போக்கு இன்றளவில் அதிகரித்து வருகிறது.

கட்சி, இனம், மதம், வர்க்க வேறுபாடுகள் இல்லாமல் மக்களால் உருவாக்கப்பட்ட இத்தகைய தன்னார்வ அமைப்புகளில் அரசாங்கம் தலையீட்டை செய்து வருகிறது. அடிமட்டத்தில் மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் மாத்திரமே இதனை சமாளிக்க முடியும் - என்று இரத்தினபுரியில் தனது கட்சி பிரமுகர்களை சந்தித்தபோது தெரிவித்தார். (ஐ)

# அமெரிக்காவுடனான ஒப்பந்தங்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 04

அமெரிக்காவால் இலங்கை ஏற்றுமதிகளுக்கான தீர்வை வரி 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டமை மகிழ்ச்சி. எனினும், இந்த வரி குறைப்பைப் பெறுவதற்காக அமெரிக்காவுடன் எட்டப்பட்ட வர்த்தக, பாதுகாப்பு உடன்படிக்கைகள் தொடர்பான விவரங்களை அரசாங்கம் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் - சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தள பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அமெரிக்காவால் இலங்கை ஏற்றுமதிகளுக்கான தீர்வை வரி வியட்நாம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைப் போன்று 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இவ்விடயத்தில் அமெரிக்க வர்த்தகத்துறைப் பிரதிநிதிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுகளை முன்னெடுத்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பாராட்டுகின்றேன். இருப்பினும் இந்த வரிக்குறைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக அமெரிக்க அரசாங்கத்துடன் எட்டப்பட்ட வர்த்தக மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படவேண்டும்.

எமது நாட்டின் ஏற்றுமதியாளர்கள் நிவாரணத்தைப் பெறுவதையும், உலகளாவிய சந்தைப் போட்டிக்கு செயல்திறன்மிக்கவகையில் முகங்கொடுப்பதையும் உறுதிப்படுத்தும் அதேவேளை, சர்வதேச தரப்புகளுடன் எட்டப்படும் சகல உடன்படிக்கைகள் தொடர்பிலும் வெளிப்படைத்தன்மை பேணப்படுவதையும் அவற்றின் விளைவாக நாட்டின் இறையாண்மை பாதிக்கப்படாதிருப்பதையும் உறுதிப்படுத்தவேண்டியது அவசியமாகும் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 7 மாதங்களில் வருமானம் 120 ஆயிரம் கோடி ரூபாய்

## சுங்கத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 04

சுங்கத் திணைக்களம் கடந்த 7 மாதங்களில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் கோடி (1,200 பில்லியன்) ரூபாய்க்கும் அதிகமான வருமானத்தை பெற்றுள்ளது என்று சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சீவலி அருங்கொட தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஒகஸ்ட் முதலாம் திகதி வரை மட்டும் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 700 கோடி ரூபாய் வருமானத்தை சுங்க திணைக்களம் பெற்றுள்ளது.

வரலாற்றில் முதன் முறையாக கடந்த ஜூலை மாதத்தில் 23 ஆயிரத்து 100 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரே மாதத்தில் இவ்வாறு அதிகூடிய வருமானம் கிடைக்கப் பெற்றதில்லை. இந்த ஆண்டு எமது வருமான இலக்கு 2 இலட்சத்து 11 ஆயிரத்து 500 கோடி ரூபாயாகும்.

இதில், ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 700 கோடி ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது.

ஜூலை வரை எட்டப்பட வேண்டிய இலக்கிலும் பார்க்க 11 ஆயிரத்து 600 கோடி ரூபாய் அதிகம் ஈட்டப்பட்டுள்ளது. எனவே, எமது வருமான இலக்கை அடைவோம்.

வாகன இறக்குமதி மூலம் 3 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஐஸுடன் மூவர் கைது

கொழும்பு, ஒக. 04

ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா - கடவத்தை பொலிஸ் பிரிவில் 25 கிராம் 400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் புத்பிட்டியை சேர்ந்த 24 வயது சந்தேகநபர் கைதானார்.

கொழும்பு - கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவில் 11 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சுமித்ராராம பகுதியைச் சேர்ந்த 36 வயது நபர் கைதானார்.

கம்பஹா - பேலியகொடை பொலிஸ் பிரிவில் 280 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் தனோவிட்ட பகுதியை சேர்ந்த 29 வயது நபர் கைதானார். (ஐ)

# குஷ் போதைப்பொருளுடன் வெளிநாட்டவர் இருவர்கைது!



கொழும்பு, ஒக. 04

குஷ் போதைப்பொருளுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் இந்தியாவை சேர்ந்த 38 மற்றும் 47 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருவரிடமிருந்து 04 கிலோ 112 கிராமும் மற்றவரிடமிருந்து 04 கிலோ 108 கிராமும் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உணவு ஒவ்வாமையால் 25 மாணவர்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக. 04

நுவரெலியாவுக்கு கல்வி சுற்றுலா சென்ற 25 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உணவு ஒவ்வாமையாலேயே இவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

பொலநறுவையிலிருந்து கல்வி சுற்றுலா சென்ற 73 மாணவர்களில் 25 பேரே நேற்று முன்தினம் வாந்தி, வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, தலைசுற்று, சுவாசிப்பதில் சிரமம் ஆகிய காரணங்களால் நுவரெலியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சிகிச்சையின் பின்னர் 10 மாணவர்கள் தங்குமிடத்துக்கு திரும்பினர். 15 மாணவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெறுகின்றனர் - எனினும் அவர்களின் உடல்நிலை மோசமாக இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அம்பேவளை பகுதியில் உணவகம் ஒன்றில் வாங்கிய உணவை உட்கொண்ட நிலையிலேயே இவர்கள் ஒவ்வாமை பாதிப்பை எதிர்கொண்டனர். இந்த சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாநகர சபை பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இஸ்ரேலியருக்கு இலவச வீசா வழங்குவதால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஒக. 04

இஸ்ரேலுக்கு இலவச வீசா வழங்கப்படுவதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படப்போவதில்லை. அத்துடன், குறித்த வீசா நடைமுறை இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. தற்போது சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலவச வீசா நடைமுறை தொடர்பில் நாடுகளுக்கு ஒரு தடவை மீளாய்வுக்கு உட்படுத்தப்படும். விமான நிலையத்தில் விசேட கண்காணிப்பு ஏற்பாடுகளும், பயணிகளை முன்கூட்டியே பரிசோதனை செய்வதற்கான பொறிமுறைகளும் உள்ளடக்கப்பட்ட புதிய முறைமை உருவாக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.


இஸ்ரேல் உள்ளிட்ட 40 நாடுகளுக்கு இலவச வீசா வழங்கும் அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இந்த நிலையில், இஸ்ரேலில் போர் குற்றசாட்டுக்கு உள்ளானவர்களும் உளவாளிகளும் இலகுவாக இலங்கைக்குள் நுழைவார்கள் என்று இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், அரசாங்கம் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில்தான் இலவச வீசா முறைமையை முன்னெடுத்து வருகிறது. இந்த நிலையில், அதனை தேசிய பாதுகாப்புடன் இணைத்து பார்ப்பது பொருத்தமில்லை - என்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் மனித எச்சங்கள் மீட்பு; மூதூர் நீதிபதி நேரில் ஆராய்வு

## அகழ்வு மேற்கொள்வதா? இல்லையா? நாளை மறுதினம் சட்ட மாநாடு



திருகோணமலை, ஓக. 04

**திருகோணமலை, சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோரத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிக்கு நேற்று முன்தினம் மூதூர் நீதிமன்ற நீதிபதி திடீரென சென்று அக்காணியின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடினார்.**

அந்தப் பகுதியில் அகழ்வு மேற்கொள்வதா?, இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்வதற்காக நாளை மறுதினம் 6ஆம் திகதி சட்ட மாநாடு ஒன்றுக்கு திகதியிடப்பட்டுள்ள நிலையில், குறித்த பகுதிக்கு சென்று நீதிபதி எச். எம். தஸ்னீம் பௌசான் கலந்துரையாடினார்.

கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை மாக் என்ற மிதிவெடி அகற்றும் நிறுவனம் மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த போது, சிதைந்த மனித மண்டை ஓடு மற்றும் எலும்புப் பகுதிகளைக் கண்டெடுத்தது. இது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, கடந்த ஜூலை 23ஆம் திகதி மூதூர் நீதிமன்ற நீதிபதி, அரச பகுப்பாய்வு திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம், குற்றவியல் தடயக் காட்சிகள் அலுவலகம் ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் அப்பகுதிக்கு சென்று நிலைமையை ஆராய்ந்தனர்.

இதன் பின்னர் அப்பகுதியில் அகழ்வுப் பணியை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்லியல் திணைக்களத் திடம் இருந்து நீதிபதியால் அறிக்கைகள் கோரப்பட்டிருந்தன.

அந்த அறிக்கைகள் கடந்த 30ஆம் திகதி புதன்கிழமை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதனை ஆராய்ந்த நீதிபதி நாளை மறுதினம் 6ஆம் திகதி குறித்த பகுதியில் அகழ்வுப் பணியை மேற்கொள்வதா?, இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக சட்ட மாநாடு ஒன்றுக்கு திகதியிடப்பட்டுள்ளதுடன் குறித்த மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டியவர்களுக்கு அழைப்பு விடுக்குமாறு சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது மேலும் சில மண்டை ஓடு, கை, கால், முள்ளந்தண்டு மற்றும் விலா என்புத் தொகுதிகளைக் கொண்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்ததாகவும் தெரிய வருகிறது. (எ)

# ஆசிரியர்களுக்கு தொற்றா நோய் தடுப்பு பரிசோதனை



சாய்ந்தமருது, ஓக. 04

தொற்றா நோய் தடுப்பு பரிசோதனை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் நேற்று கல்முனை கல்வி வலயத்துக் குட்பட்ட சாய்ந்தமருது எம்.எஸ் காரியப்பர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு தொற்றா நோய் தடுப்பு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு, குருதிச் சீனி பரிசோதனை, உடல் அழுத்த பரிசோதனை மற்றும் உடல் நிறை மதிப்பு பரிசோதனைகள் செய்யப்பட்டன.

மேலும், ஆரோக்கியமான வாழ்க்கை முறை, சீரான உணவு முறை மற்றும் நீண்ட நாள் நோய்களைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இதில், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் டெங்கு தடுப்பு பணியாளர்களும் பங்கேற்றனர். (எ-06)

# நெல் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் திட்டம்

நிந்தவூர், ஓக. 04

நிந்தவூர் - பிரதேசத்தில் நடைபெற்ற "ரண்சறுபொல முறைமையில் பயிரிடுவோம் விவசாயிகளை ஊக்குவிப்போம்" என்ற கருப்பொருளில் விவசாயிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நெல் அறுவடை நிகழ்வு வெற்றிகரமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (எ)

# "பல்வேறு மதங்களை மதிப்பது சமூக ஒற்றுமைக்கு அவசியம்"

திருகோணமலை, ஓக. 04

திருகோணமலை மாவட்டத்தில் பணிபுரியும் முஸ்லிம் பெண்கள் - சுகாதார ஊழியர்களின் மத மற்றும் பண்பாட்டு உரிமைகளை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு, பல்வேறு மதங்களை மதிப்பது சமூக ஒற்றுமைக்கு அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுகாதார அமைச்சருக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிந்து பணிபுரிவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, இது மத சுதந்திரம் மற்றும் பண்பாட்டு அடையாள உரிமைக்கு எதிரானது எனக் கண்டித்துள்ளார்.

மேலும், இந்த அறிவுறுத்தல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பெரும் மன அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இது அவர்களின் அரசியல் சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட மத நம்பிக்கையின் உரிமைக்கும், சுதந்திர உரிமைக்கும் எதிராக இருக்கிறது எனவும் அவர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல ஆண்டுகளாக ஹிஜாப் அணிந்து பணிபுரிந்து வரும் முஸ்லிம் பெண்கள், தங்கள் வேலையை திறமையாகவும் பணிகளுக்கு எந்தவித பாதிப்புமின்றி ஆற்றி வந்துள்ளனர்.

இலங்கை அரசமைப்பின் 10 மற்றும் 14(1)(எ) அம்சங்கள் மத சுதந்திரத்தை உறுதி செய்கின்றன.

ஹிஜாப் அணிவது தொழில் நுட்பத்துக்கோ அல்லது சேவைக்கோ பாதிப்பில்லை.

பல்வேறு மதங்களை மதிப்பது

சமூக ஒற்றுமைக்கு அவசியம்.

இது புதிய சலுகை அல்ல - நீண்டகாலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை. இது தொடர வேண்டும் என்பதே கோரிக்கையாகும்.

அத்துடன்,

விரைவில் இது தொடர்பில் கவனம் செலுத்தப் பட வேண்டும் எனவும்,

இது அரசமைப்பு பண்புகளை உள்ளடக்கிய, மதிப்புமிக்க சமுதாயத்தின் செய்தியையும் பறைசாற்றும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (எ)

# பிரதேச நிர்வாகங்கள் ஒருபோதும் இன ரீதியாக அமைக்கப்படமாட்டாது

## அரசாங்கம் எழுத்து மூலம் உத்தரவாதம்

கல்முனை, ஓக. 04

பிரதேச நிர்வாகங்கள் ஒருபோதும் இன அடிப்படையில் அமைக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதம் அரசாங்கத்தால் தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

கல்முனை உப பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் அம்பாறை,ஒலுவில் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,"பிரதேச செயலகங்களோ அல்லது பிரதேச சபைகளோ இன அடிப்படையில் அமைக்கப்பட மாட்டாது என்ற உறுதியான உத்தரவாதத்தை நான் ஏற்கனவே அரசாங்கத்திடமிருந்து எழுத்து மூலமாக பெற்றுள்ளேன்.

இந்த விடயத்தை அரசியலாக்கவோ, இன உணர்வுகளை தூண்டி அரசியல் பலன் பெறவோ நான் விரும்பவில்லை. அதனாலேயே நான் இது பற்றி ஊடகங்களில் பிரஸ்தாபித்து, எந்தவொரு விளம்பரத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை.

தமிழ், முஸ்லிம் உறவைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வுடன் நான் செயல்படுகிறேன்.

முஸ்லிம் பெரும்பான்மையுள்ள பிரதேசங்களில் தமிழர்களுக்கும் தமிழ் பெரும்பான்மையுள்ள பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கும் எந்த அநீதியும் நிகழக்கூடாது என்பதே எனது நிலைப்பாடு. காணி, நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நிர்வாக தீர்மானங்களில் ஏதேனும் சரிபார்க்கக் கூடிய முறைப்பாடுகள் இருந்தால், அதனை மாவட்ட மட்டத்தில் இரு சமூக பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு செய்யும் குழு அமைப்பது ஒரு கட்டமைக்கப்பட்ட வழியாக இருக்கலாம்.

கிராம சேவை பிரிவுகள் போன்ற நிர்வாக மாற்றங்களில் முன்பே சில அநீதிகள் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன. இது போன்ற பிரச்னைகளை சமூகத் தலைவர்களுடன் கலந்துரையாடல் மூலமே தீர்க்கப்பட வேண்டும். இன அடிப்படையில் அரசியல் செய்வது எதிர்மறையான விளைவுகளையும் தமிழ் - முஸ்லிம் உறவுகளை பலவீனமாக்கும் அபாயத்தையும் ஏற்படுத்தும். என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# கல்முனை விவகாரம் தொடர்பில் எம்.பிக்களுடன் கலந்துரையாடல்

கல்முனை, ஓக. 04

அம்பாறை மாவட்டம், கல்முனையின் சமகால விவகாரங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் முக்கிய கலந்துரையாடல் கல்முனை அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் சிவில் நிறுவனங்களுக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் ஒலுவில் கிறீன் வில்லாவில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் திகாமடுல்லவை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான எம். நிஸாம் காரியப்பர், எம். எஸ் . உதுமாலெப்பை, எம். எஸ். அப்துல் வாஸீத் மற்றும் எம். ஏ. தாஹிர் ஆகியோர் கட்சி பேதங்களுக்கு அப்பால் கலந்துகொண்டனர். (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக பணக்காரர்கள் பட்டியலில் எலான் மஸ்க் தொடர்ந்து முதலிடம்



வாஷிங்டன், ஒக. 04

உலக பணக்காரர்கள் பட்டியலில் எலான் மஸ்க் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

அமெரிக்க பங்குச்சந்தை குறியீடுகளை மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் புதிய உச்சங்களுக்கு கொண்டு சென்றுள்ளன. இதன் அடிப்படையில் உலகின் முதல் 10 பணக்காரர்கள் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதில் எலான் மஸ்க் 401 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் (இலங்கை மதிப்பில் 117.48 இலட்சம் கோடி ரூபாய்) முதலிடத்தில் உள்ளார்.

2ஆவது இடத்தில் லாரி எலிசனும், 3ஆவது இடத்தில் மார்க் ஜூக்கர்பெர்க்கும் உள்ளனர். ஜெப் பெசோஸ், லாரி பேஜ், ஜென்சன் ஹூவாங், செர்ஜி பிரின், ஸ்டீவ் பால்மர், வாரன் பபெட், பெர்னார்ட் அர்னால்ட் ஆகியோர் முறையே 4 முதல் 10 இடங்களில் உள்ளனர். தற்போது வெளியிடப்பட்ட உலகின் முதல் 10 பெரும் பணக்காரர்கள் பட்டியலில் 9 பேர் அமெரிக்கர்கள் ஆவர். பெர்னார்ட் அர்னால்ட் பிரான்ஸை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ரஷ்ய எல்லையில் இரு அணு ஆயுத நீர்மூழ்கி கப்பல்கள் நிலைநிறுத்தம்

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவு

வாஷிங்டன், ஒக. 04

**ரஷ்ய எல்லையில் இரண்டு அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல்களை நிலைநிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.**

ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்துவதற்கான அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முயற்சிகள் பலனளிக்காததால், ரஷ்யா மீது பொருளாதாரத் தடையை அமெரிக்க அரசு விதித்து வருகின்றது. அத்தோடு, ரஷ்யாவுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் நாடுகளுக்கு கடும் நெருக்கடி கொடுத்து வருகின்றது.

ட்ரம்பின் எச்சரிக்கையை மீறி ரஷ்யாவிடம் இருந்து அதிகளவிலான கச்சா எண்ணெய் கொள்முதல் செய்யும் காரணத்தால் இந்தியாவுக்கு 25 சதவீதம் வரி விதித்து ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

மேலும், இந்தியா மற்றும் ரஷ்யாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரங்கள் என்று ட்ரம்ப் விமர்சித்திருந்தார்.

இந்த நிலையில், ரஷ்ய பாதுகாப்பு சபை துணைத் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான டிமிட்ரி மெட்வெடே, ட்ரம்புக்கு பதிலளித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

"ரஷ்யாவுக்கு 50 நாட்கள், 10 நாள்கள் எனக் கெடு விதிக்கும் விளையாட்டை ட்ரம்ப் விளையாடிக் கொண்டிருக்கிறார். அவர் இரண்டு விடயங்களை புரிந்துகொள்ள வேண்டும். ரஷ்யா இஸ்ரேலோ ஈரானோ கிடையாது. ஒவ்வொரு இறுதி எச்சரிக்கையும் ஓர் அச்சுறுத்தலாகும். போரை முன்னோக்கி எடுத்துச் செல்லும். ரஷ்யா - உக்ரைன் இடையே அல்ல, அவரது சொந்த நாட்டுடன்."- எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவருக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ட்ரம்ப் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாதுகாப்பு சபை துணைத் தலைவருமான டிமிட்ரி மெட்வெடேவின் அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் வகையில் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களை ரஷ்யாவுக்கு நெருக்கமான பகுதிகளில் நிலைநிறுத்த உத்தரவிட்டுள்ளேன்.

வார்த்தைகள் மிகவும் முக்கியமானவை. அவை எதிர்பாராத விளைவுகளுக்கு வழிவகுக்கும்"- என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இருப்பினும், எந்தப் பகுதிக்கு நீர்மூழ்கிக் கப்பல்கள் அனுப்பப்பட்டுள்ளன. அணு ஆயுத தாக்குதல் நடத்தக் கூடிய கப்பல்களா என்பது குறித்து ட்ரம்ப் எதுவும் தெரிவிக்கவில்லை. (எ)

## 20 கிலோ மீற்றர் உயரத்துக்கு வெடித்து சிதறிய எரிமலை!

### விமானங்கள் பறக்க தடை



ஜகார்த்தா, ஒக. 04

இந்தோனேஷியாவில் 20 கிலோ மீற்றர் உயரத்துக்கு எரிமலை வெடித்துச் சிதறியது. இதனால், விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பசிபிக் நெருப்பு வளைய பகுதியில் இருப்பதால் இந்தோனேஷியாவில் பல எரிமலைகள் அமைந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கது வெவோ டோபி நகரில் உள்ள லிவோட்பி எரிமலை. 1500 மீற்றர் உயரமுள்ள இந்த எரிமலை பிரபலமாக லக்கி லக்கி என அறியப்படுகிறது. எழில் கொஞ்சும் இந்த மலையின் அழகைக் காண வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் படையெடுக்கின்றனர்.

அழகு இருக்கும் இடத்தில் ஆபத்தும் கூடவே இருக்கும் என்பதுபோல அந்த எரிமலை சமீப காலமாக அடிக்கடி வெடித்துச் சிதறுகிறது. இதன்படி லக்கி லக்கி எரிமலை பயங்கர சத்தத்துடன் நேற்று முன்தினம் வெடித்துச் சிதறியது. இதனால் எரிமலையில் இருந்து சுமார் 20 கிலோ மீற்றர் உயரத்துக்கு தீக்குழம்பு வெளியேறியது.

இதனைத் தொடர்ந்து அடுத்த சில மணி நேரங்களில் மீண்டும் எரிமலை வெடிக்கத் தொடங்கியது. எனவே அந்த இடம் முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சியளித்தது.

இதனால் எரிமலையை சுற்றியுள்ள பகுதியில் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டது. மேலும் எரிமலையிலிருந்து வெளியேறிய சாம்பல் 8 கிலோ மீற்றர் தூரம் வரை ஆறாக ஓடியது. எனவே, எரிமலை அருகே உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றப்பட்டனர். இதனால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. (எ)

## இந்தியா - ரஷ்யா உறவு பாதிக்காது

புதுடில்லி, ஒக. 04

இந்தியா - ரஷ்யா இடையிலான உறவு வலுவானது. மூன்றாவது நாட்டின் தலையீட்டால் இந்த உறவு பாதிக்கப்படாது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்தால் இந்தியாவுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து புதுடில்லியில் மத்திய வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில், 'இந்தியா - ரஷ்யா உறவு வலுவானது. மூன்றாவது நாட்டின் தலையீட்டால் இந்த உறவு பாதிக்கப்படாது. இதே போல இந்தியா - அமெரிக்கா உறவும் வலுவடைந்து வருகிறது.

நாட்டின் நலனுக்கு தேவையான பாதுகாப்பு கொள்கையை கடைப்பிடித்து வருகிறோம்"- என்றார். (எ)

# இந்தியா எடுத்த முடிவு ஒரு நல்ல நடவடிக்கை

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

வாஷிங்டன், ஒக. 04

இந்தியா இனி ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யாது என்று நான் கேள்விப்பட்டேன். இது ஒரு நல்ல நடவடிக்கை. எனினும் இந்த விவகாரம் குறித்து எனக்கு உறுதியாக எதுவும் தெரியவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்றார். அதைத் தொடர்ந்து, அமெரிக்கா மீது பிற நாடுகள் விதிக்கும் வரியை போலவே, அதே அளவுக்கு வரி விதிக்கப்போவதாக அறிவித்தார். கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீதான வரிவிதிப்பை அவர் அறிவித்தார்.

பின்னர், வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள கால அவகாசம் அளிக்கும் வகையில் வரிவிதிப்பை 90 நாட்கள் ஒத்திவைத்தார். கடந்த ஜூலை 9ஆம் திகதி அமுலுக்கு வருவதாக இருந்த வரிவிதிப்பு, ஒகஸ்ட் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்தியா - அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுவதில் இழுபறி நீடித்த நிலையில், இந்திய இறக்குமதி பொருட்களுக்கு 25 சதவீதத்தை ட்ரம்ப் அறிவித்தார்.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா கைவிட வேண்டும் என்றும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார். இந்த நிலையில், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கப்போவது இல்லை என இந்தியா முடிவு செய்துள்ளதாக ட்ரம்ப் கூறியுள்ளார். இது ஒரு நல்ல நடவடிக்கை. எனினும் இந்த விவகாரம் குறித்து எனக்கு உறுதியாக எதுவும் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## கம்சாட்கா தீபகற்பத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

மொஸ்கோ, ஒக. 04

ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள கம்சாட்கா தீபகற்பத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு 07. 44 மணி யளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

20 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்த தவலும் வெளியாகவில்லை.

கம்சாட்கா தீபகற்பத்தில் மீண்டும் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

கீவ், ஒக. 04

உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் 16 பேர் பலியாகினர்.

ரஷ்யா - உக்ரைன் இடையே கடந்த 3 ஆண்டுகளுக்கு மேல் நீடித்து வரும் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் உக்ரைன் தலைநகர் கீவ் பகுதியில் ரஷ்ய படைகள் அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டன. 300 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள், ட்ரோன்களை வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நள்ளிரவு நேரம் சரமாரியாக குண்டு மழை பொழிந்ததால் கட்டடங்கள் சேதமடைந்தன. இந்தத் தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 16 பேர் உயிரிழந்தனர்.

100இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம டைந்தனர். இதில் 16 பேர் குழந்தைகள் ஆவர். அவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் இது பெரிய தாக்குதலாகும். இது தொடர்பில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறும் போது, தாக்குதல் நடத்திய பகுதியில் மீட்புப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்தப் பணியில் பொலிஸார் உட்பட 1200இற்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா ஓபின் ரென்னிஸ்: கோகோ காப் தோல்வி



றொரண்டோ, ஓக. 04

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் கோகோ காப் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்தத் தொடர் றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்க வீராங்கனை கோகோ காப், கனடாவின் விக்டோரியா எம்போகோ உடன் மோதினார்.

இதில் முழுவதுமாக ஆதிக்கம் செலுத்திய விக்டோரியா எம்போகோ 6-1 மற்றும் 6-4 என்ற நேர் செற் கணக்கில் கோகோ காபை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். அதிர்ச்சி தோல்வியடைந்த கோகோ காப் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

## இங்கிலாந்துடன் டெஸ்ட் ஜடேஜா புதிய சாதனை

லண்டன், ஓக. 04

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரவீந்திர ஜடேஜா புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த போட்டியில் அரைச்சதம் அடித்ததால் ஜடேஜா புதிய சாதனை படைத்துள்ளார். இந்த தொடரில் ரவீந்திர ஜடேஜா ஒரு சதம், 5 அரைச்சதம் உட்பட 516 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 6 மற்றும் அதற்கு கீழ்வரிசையில் களமிறங்கி ஒரு தொடரில் 500 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

இங்கிலாந்து மண்ணில் ஒரு தொடரில் அதிக முறை (6 தடவை) 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த இந்தியர் என்ற மகத்தான சாதனையையும் ரவீந்திர ஜடேஜா சொந்தமாக்கினார். இதற்கு முன்பு சுனில் கவாஸ்கர், விராட் கோலி, ரிஷப் பண்ட் ஆகியோர் தலா 5 முறை 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. (எ)

## ஜெசிகா பெகுலா தோல்வி



றொரண்டோ, ஓக. 04

மாண்ட்ரியல் ஓபின் ரென்னிஸ் தொடரில் ஜெசிகா பெகுலா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

இந்தத் தொடர் கனடாவின் றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியனும் தரவரிசையில் 4ஆவது இடம் வகிப்பவருமான அமெரிக்க வீராங்கனை ஜெசிகா பெகுலா, தரநிலையில் 386ஆவது இடத்தில் உள்ள லாத்வியாவின் அனஸ்டாசியா செவஸ்தோவாவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் ஜெசிகா பெகுலா 6-3, 4-6, 1-6 என்ற செற் கணக்கில் செவஸ்தோவாவிடம் அதிர்ச்சி தோல்வி கண்டார். தோல்விக்கு பிறகு ஜெசிகா பெகுலா கூறுகையில், "நான் சிறப்பான ஆட்டத்தை ஆடியதாக உணரவில்லை. எனது ஆட்டம் ஏற்றம், இறக்கம் நிறைந்ததாக இருக்கிறது. அத்துடன் எனது ஆட்டத்தில் தொய்வும் தெரிகிறது. இது எனக்கு கவலை அளிக்கிறது"- என்றார். (எ)

லெஜண்ட்ஸ் லீக் இறுதி போட்டியில்

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தி சம்பியனானது தென்னாபிரிக்கா



பர்மிங்காம், ஓக. 04

லெஜண்ட்ஸ் லீக் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தென்னாபிரிக்க அணி சம்பியனானது.

ஓய்வு பெற்ற வீரர்கள் பங்கேற்ற 2ஆவது உலக சம்பியன்ஸ் லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்றது.

இந்தத் தொடரின் சம்பியன் யார்? என்பதை நிர்ணயிக்கும் இறுதிப்போட்டி பர்மிங்காமில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் சம்பியன்ஸ் - தென்னாபிரிக்கா சம்பியன்ஸ் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் அணிக்கு தொடக்க ஆட்டக்காரரான ஷர்ஜீல் கான் நிலைத்து விளையாட மறுமுனையில் விக்கெட்கள் வேகமாக சரிந்தன.


இறுதிக் கட்டத்தில் உமர் அமின் (36 ஓட்டங்கள்) மற்றும் ஆசிப் அலி (28 ஓட்டங்கள்) ஆகியோரின் அதிரடியால் பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 195 ஓட்டங்கள் அடித்தது. தென்னாபிரிக்கா தரப்பில் வில்ஜோன் மற்றும் பார்னெல் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

பின்னர் 196 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக அம்லா மற்றும் ஏபி டி வில்லியர்ஸ் களமிறங்கினர். இதில் அம்லா 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து ஏபி டி வில்லியர்ஸ் உடன் டுமினி கை கோர்த்தார். இருவரும் அதிரடியாக விளையாடி தென்னாபிரிக்க அணியை வெற்றியை நோக்கி பயணிக்க வைத்தனர். பாகிஸ்தான் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய ஏபி டி வில்லியர்ஸ் சதமடித்து அசத்தினார். மறுமுனையில் டுமினி அரைச்சதம் அடித்தார்.

வெறும் 16. 5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்த தென்னாபிரிக்கா 197 ஓட்டங்கள் அடித்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. டி வில்லியர்ஸ் 120 ஓட்டங்களுடனும் டுமினி 50 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகனாக ஏபி டி வில்லியர்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (எ)

# 2 விக்கெட் வித்தியாசத்தில் மே.இ.தீவுகள் அணி வெற்றி



புளோரிடா, ஓக. 04

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 2 விக்கெட்கள் வித்தியாசத்தில்

மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது போட்டி நேற்று நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 133 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக ஹசன் நவாஸ் 40 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் ஹோல்டர் 4 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

இதனையடுத்து 134 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணியும் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்து தடுமாறியது. பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசி மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு நெருக்கடி கொடுத்தனர். இதனால் ஆட்டம் பரபரப்பாகவே நகர்ந்தது. இருப்பினும் இலக்கு குறைவானது என்பதால் குடகேஷ் மோட்டி (28 ஓட்டங்கள்), ஷாய் ஹோப் (21 ஓட்டங்கள்), ரோஸ்டன் சேஸ் (16 ஓட்டங்கள்) ஆகியோரின் கணிசமான ஒத்துழைப்புடன் மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றியை நோக்கிப் பயணித்தது.

மேற்கு இந்திய தீவுகள் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 8 ஓட்டங்கள் தேவைப்பட்டது. பரபரப்பான அந்த ஓவரை பாகிஸ்தான் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஷாகீன் அப்ரிடி வீசினார். அந்த ஓவரின் முதல் 5 பந்துகளில் 5 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்த அவர் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். இதனால் கடைசி பந்தில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டது. உச்சக்கட்ட பரபரப்புக்கு மத்தியில் கடைசி பந்தை எதிர்கொண்ட ஹோல்டர் பௌண்டரி அடித்து மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு திரில் வெற்றியை பெற்றுக் கொடுத்தார்.

ஹோல்டர் 16 ஓட்டங்களுடனும் ஷமர் ஜோசப் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். பாகிஸ்தான் தரப்பில் முகமது நவாஸ் 3 விக்கெட்கள் வீழ்த்தினர். ஹோல்டர் ஆட்ட நாயகன் விருது வென்றார்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியுள்ளது. (எ)

## இங்கிலாந்து அணி வெற்றிக்கு இன்னும் 324 ஓட்டங்கள் தேவை

லண்டன், ஓக. 04

5 ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு இன்னும் 324 ஓட்டங்கள் தேவைப்படுகிறது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 224 ஓட்டங்களில் சுருண்டது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 247 ஓட்டங்கள் எடுத்தது.

23 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய இந்திய அணி 396 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால் இங்கிலாந்து அணிக்கு 374 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இங்கிலாந்து சார்பில் கஸ் அட்கின்சன் 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 374 ஓட்டங்கள் இலக்குடன் இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸில் விளையாடியது. தொடக்கம் முதலே பென் டக்கெட், ஜாக் கிராலி இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர். 50 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஜாக் கிராலி 14 ஓட்டங்களுக்கு முகமது சிராஜ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 3ஆவது நாள் முடிவில் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 50 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு இன்னும் 324 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறுதலாக தீ பற்றியதில் 95 வயது முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக. 04

தவறுதலாக உடையில் தீ பற்றியதால் முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

பட்டினசபை வீதி, மானிப்பாய் பகுதியை சேர்ந்த மா. சின்னமணி (வயது 95) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த முதியவர் கடந்த 26ஆம் திகதி அன்று சுருட்டு புகைப்பதற்கு பற்றவைத்த தீக்குச்சியை தவறுதலாக அவர் அணிந்திருந்த ஆடையில் போட்டுள்ளார். இதில் தீக்காயங்களுக்கு உள்ளான அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன தினம் உயிரிழந்தார்.

அவரது இறப்பு தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## கடிதம்...

சாட்சியமளிக்க தயாராக உள்ளேன் என்று கிருஷாந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தனது மனைவி மூலம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நீதி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், ஜனாதிபதிக்கு இந்தக் கடிதம் கிடைத்ததாக என்னால் உறுதிப்படுத்த முடியாதுள்ளது என்றும் சொன்னார். (ஐ)

## போதைக்கு...

அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது.

கைதான இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சர்வதேச...

தலைமையகத்தில் கொலை செய்யப்பட்டு செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டுவரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரின் குடும்பத்தாரின் சடலங்களை கப்டன் லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைய புதைத்ததைத் தவிர வேறேந்தக் குற்றத்தையும் தனது கணவர் புரியவில்லை என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்தகால அரசாங்கங்கள் இராணுவ உயரதிகாரிகளைப் பாதுகாத்துக் கொண்டு, கீழ்மட்ட வீரர்களைத் தண்டிப்பதன் ஊடாக, குற்றமிழைத்த இராணுவத்தினரை தாம் தண்டித்திருப்பதாக சர்வதேச சமூகத்துக்குக் கூறிவந்தன என்றும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

செம்மணி சோதனைச் சாவடியானது அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்குள் உள்நுழையும் பிரதான சோதனைச் சாவடியாக இருந்தது. அந்தச் சோதனைச் சாவடியில் பணியாற்றிய எனது கணவர் உள்ளடங்கலாக ஏனைய ஐந்து இராணுவத்தினருக்கு மேலதிகமாக கப்டன் லலித் ஹேவாகேயின் ஆலோசனைக்கு அமைவாக நாளாந்தம் இந்த சோதனைச்சாவடிக்கு வருகைதரும் லெப்டினன்ட் துடுகல, லெப்டினன்ட் உதயகுமார, மொழிபெயர்ப்பாளரான பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் பரிசோதகர் நஸார் ஆகியோரால் அங்கு அழைத்துவரப்படும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரால் அடையாளம் காண்பிக்கப்படும் வீதியில் செல்லும் சந்தேகநபர்கள் செம்மணி சோதனைச்சாவடியில் கைது செய்யப்படுவர்.

அவர்கள் மாலை 4.00 மணியின் பின்னர் ட்ரக் வாகனத்தில் ஏற்றப்பட்டு 7ஆவது காலணி இராணுவப் படைத் தலைமையகத்துக்கு கொண்டு செல்லப்படுவர். அங்கு மரணிப்போரின் உடல்கள் இரவு வேளையில் மீண்டும் செம்மணி சோதனைச்சாவடிக்குக் கொண்டு வரப்படும். அவற்றை புதைக்குமாறு எனது கணவர் உள்ளிட்ட தரப்பினருக்கு உத்தரவிட்டுவிட்டு, வந்தவர்கள் மீண்டும் திரும்பிச்செல்வார்கள் என்றே எனது கணவர் கூறியிருக்கிறார். செம் மணி சோதனைச்சாவடியில் இவ்வா றான நடவடிக்கைகள் சுமார் ஒருவருடகாலமாக இடம்பெற்றிருக்கின்றன.

கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளடங்கலாக அவரது குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மாத்திரம் வெளிவந்தமைக்கான காரணம் என்ன? செம்மணி சோதனைச்சாவடியில் இதுவரையில் சுமார் 300 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, கொன்று புதைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறிருக்கையில் கிருஷாந்தி குமாரசுவாமி குடும்பத்தின் படுகொலை மாத்திரம் வெளியே வந்தமைக்கு இதுவே காரணமாகும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் சகோதரியான சுனேத்ரா பண்டாரநாயக்கவின் கணவர் சர்வதேச மனித உரிமைகள் செயல்பாட்டாளரான குமார் ரூபசிங்க ஆவார். குமார் ரூபசிங்க கிருஷாந்தி குமாரசுவாமி குடும்பத்தின் உறவினர் என்பதனால், அவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை விவகாரம் தொடர்பில் மாத்திரம் கவனம்செலுத்தப்பட்டு, செம்மணி சோதனைச் சாவடியில் பணியாற்றிய எனது கணவர் உள்ளிட்ட இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டது.

தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் எனது கணவரால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு அமைவாக 1999 ஆம் ஆண்டு கப்டன் லலித் ஹேவாகே, கப்டன் பெரேரா, லெப்டினன்ட் உதயகுமார, மொழிபெயர்ப்பாளர்களான பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் பரிசோதகர் அப்துல் ஹமீட் நஸார், லெப்டினன் துடுகல ஆகிய அதிகாரிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். 6 மாதங்களில் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அந்த வழக்குக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியவில்லை.

இந்நிலையில் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் எனது கணவரால் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இருப்பினும் உயர்நீதிமன்றத்துக்கு அழுத்தம் பிரயோகித்து, எனது கணவர் உள்ளிட்ட தரப்பினருக்கு மீண்டும் மரண தண்டனை விதிக்கச் செய்தவர் அப்போதைய ஜனாதிபதி யாவார். செம்மணி சோதனைச் சாவடி குறித்த சகல தகவல்களையும் மேல் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியமையே அதற்குக் காரணமாகும். அந்தப் பழி வாங்கல்கள் இன்றுவரை தொடர்கின்றன - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## புலம்பெயர்...

கொழும்பில் உள்ள சர்வஜன சக்தி கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று நடந்த நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்ட முன்னாள் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதிக்குரிய எவ்வித சலுகைகளையும் பெற்றுக்கொள்ள வில்லை.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நெருக்கடிக்கு உள்ளாக்க இந்த அரசாங்கம் பல்வேறு வழிகளில் முயற்சிக்கிறது. பிரிவினைவாத கொள்கையுடைய புலம்பெயர் தமிழ் அமைப்புகளை திருப்திப்படுத்தவே மகிந்த ராஜபக்ஷவை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் தான் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் முன்னாள் ஜனாதிபதிகள் எவரும் வீதிக்கு வருவதில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விஜயராமை அரச இல்லத்தில் இருந்து வெளியேற்றினால் அவருக்கு பெரும்பாலான மக்கள் உறுதிப்பத்திரத்துடன் தமது வீடுகளைக் கையளிக்க தயாராகவுள்ளார்கள் - என்றார். (ஐ)

## சர்வதே விசாரணைக்கு...

ராஜபக்ஷவுக்கு உடனடியாக அதியு யர் விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்”, என்று வலியுறுத்தியுள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

“...கிருஷாந்தி குமாரசுவாமி மட்டும் அல்ல, இன்னமும் பல நூற்றுக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டனர். இதை நான் 1998ஆம் வருடமே என் சாட்சியத்தில் சொன்னேன். இன்று ஐந்து அல்லது ஆறு மனித புதை குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நான் சொன்னது உண்மையாகி உள்ளது. மொத்தமாக 250 முதல் 300 பேர் வரை சித்திரவதைக்கு உள்ளாகி கொன்று புதைக்கப்பட்டார்கள். இன்று தண்டனைக்கு உள்ளாகி இருக்கும் நானும், ஏனைய நால்வரும் மட்டும் இத்தனை பேரை கைது செய்து, சித்தரவதை செய்து, கொன்று, குழிதோண்டிப் புதைக்க முடியுமா.?” - லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தனது மனைவி திருமதி எஸ். சி. விஜயவிக்கிரம மூலம் இவ்வாறு கூறி உள்ளார் என்று சுட்டிக் காட்டியுள்ள மனோ கணேசன் மேலும் அந்த அறிக் கையில் குறிப்பிடுகையில்,

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை குற்றவாளி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி திருமதி எஸ். சி. விஜயவிக்கிரம, ஜனாதிபதி அநுர குமாரவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதன் நகல்களை பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் அனுப்பியுள்ளார். ஐ. நாவுக்கும் அனுப்பி உள்ளார். அந்தக் கடிதத்தில் தனது கணவர் தன்னிடம் கூறிய மேற்கண்ட விடயங்களை, அவர் எழுதியுள்ளார். ஆகவே, இன்று இந்தக் கடிதம், அநுர குமார திஸநாயக்கவின் “கோர்ட்டில்“ நிற்கிறது.

சர்வதேச கண்காணிப்பு விசாரணைக்கு ஜனாதிபதி அநுர உடன்பட வேண்டும். அதிலே லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ சுதந்திரமாக சாட்சியம் அளிக்க வேண்டும். ஆனால், இவற்றுக்கு முன், இன்று சிறையில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவுக்கு, உடனடியாக அங்கே அதியுயர் விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

இது தொடர்பில், அரசியல் சிவில் சமூகமாக நாம் கூட்டு மேல் நடவடிக்கைக்கு தயாராவோம். ஐ. நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க்கிடம் நாம் அதிகாரபூர்வமாக கோரிக்கை விடுப்போம். பிரசித்தி பெற்ற சித்திரவதை, பாலியல் வல்லுறவு, படுகொலை வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, தனக்கு ஆணையிட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்டத் தயார் என்கிறார். இலங்கை வரலாற்றில் இப்படியோர் இராணுவத்தை சேர்ந்த நபர் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்து, தனக்கு ஆணை இட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்டத் தயார் என்று கூறவில்லை.

ஆகவே, இதை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்க அநுர குமார அரசாங்கம் முன் வர வேண்டும். சர்வதேச நெருக்குதல்களை முறையாகத் தர ஐ. நா. மனித உரிமைகள் ஆணையகமும் முன்வர வேண்டும். இதைச் செய்ய முடியாவிட்டால், இது ஓர் அரசாங்கமாகவோ, அது ஓர் ஐநா சபையாகவோ இருக்க முடியாது. இது இன்று சர்வதேச விவகாரம் ஆகி விட்டதை அநுர குமாரவும் வோல்கர் டர்க்கும் உணர வேண்டும். அதனால்தான், அநுவுக்கு செம்மணி விவகாரம் ஓர் அக்கினி பரீட்சை என்று அன்றே சொன்னேன். இன்று மீண்டும் கூறுகிறேன் - என்றுள்ளது. (ஐ)

## வடக்கு கல்வியில்...

வவுனியா மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடப்பட்டது. இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## வடக்கு...

கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் அரசியல் குழு கூட்டத்தின் பின்னர் அவர் இந்த விடயத்தை ஊடகங்களிடம் தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதிக்கு...

ஜனாதிபதிகள் கடந்த காலத்தில் தேசத்துக்கு சேவை செய்தவர்கள். எனவே, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் எந்தத் தவறும் இல்லை. இருப்பினும், அவர்களுக்கு ஊழியர்கள், பணிமனைகள் போன்ற கூடுதல் ஆடம்பரங்களை வழங்கத்[illegible]து”, என்றார். (ஐ)

## அரியாலை...

வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார். அவரை தேடிச் சென்ற குடும்பத்தினர், அயலவர் என நால்வர் கொல்லப்பட்டனர். இது தொடர்பான வழக்கில் 6 இராணுவத்தினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனை பெற்றவர்களில் ஒருவரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ செம்மணியில் 300 முதல் 400 பேர் வரையானோர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் என்று கூறினார். 1999ஆம் ஆண்டு செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வில் 15 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இந்த அகழ்வு பணி நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், செம்மணியின் தொடர் நிலமாக உள்ள அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கடந்த பெப்ரவரி 13ஆம் திகதி மின் தகன மேடை அமைப்பதற்காக அத்திபாரம் வெட்டப்பட்டபோது மனித எலும்பு எச்சங்கள் கண்டறியப்பட்டன. பரிசோதனைகளில் அவை மனித எலும்புக்கூடுகள் என்று உறுதிப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து அந்த இடத்தை அகழ்வதற்கு யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மே 15 ஆம் திகதி ஆரம்பமான முதல் கட்ட அகழ்வு பணிகள் 9 நாட்கள் தொடர்ந்திருந்தன. இதன்போது, 19 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டு மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, இரண்டாம் கட்ட அகழ்வு கடந்த ஜூன் 26ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. இந்த அழ்வுப் பணி 45 நாட்களுக்கு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# சொத்து விவரம் சமர்ப்பிக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 04

**சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அறிவிப்புகளை இதுவரையில் சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்த ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

30.06.2025 முதல் 31.08.2025 வரை தாமதமாக சமர்ப்பிக்கப்பட்ட சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அறிவிப்புகளுக்கு சட்ட விதிகளுக்கு அமைவாக அபராதம் விதிக்கப்படும். இதற்கமைய, இதுவரை சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகளை சமர்ப்பிக்காத அதிகாரிகள் யாராவது இருந்தால், அவர்கள் அந்த அறிவிப்புகளை விரைவில் தங்கள் நிறுவனத் தலைவர்களிடம் சமர்ப்பித்து, அவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய நிர்வாக அபராதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், ஜூன் 30 ஆம் திகதிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அறிவிப்புகளை நிறுவனத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் அவற்றை நிறுவனத் தலைவர்கள் ஏற்க மறுத்தால், இது தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அறியத்தருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விசுவமடுவில் கசிப்பு விற்பனை சந்தேகநபர்கள் இருவர் கைது!

முல்லைத்தீவு, ஓக. 04

கசிப்பு விற்பனை நிலையம் ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டதுடன், இருவரை கைது செய்தனர்.

விசுவமடு - மாணிக்கபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர்கள் விற்பனைக்கு வைத்திருந்த 30 லீற்றர் கசிப்பு, 2 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் ஒன்றுக்கு எந்த ஆவணங்களும் இருக்கவில்லை என்றும் தெரிய வந்தது.

கைதானவர்கள் அதே இடத்தைச் சேர்ந்த 51, 53 வயது நபர்களாவர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## யானை தாக்கி சிறுமி மரணம்

கொழும்பு, ஓக. 04

தந்தையை தாக்கத் துரத்திய யானையிடம் சிக்கி சிறுமி ஒருவர் உயிரிழந்தார். மகளை காப்பாற்ற முனைந்த தந்தை படுகாயமடைந்தார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 8 வயது சிறுமியே உயிரிழந்தார்.

தோட்டத்திலிருந்து தந்தையை காட்டு யானை தாக்க முயன்றது. அவர் வீட்டை நோக்கி ஓடி வந்துள்ளது. இதன்போது, வீட்டிலிருந்து வந்த சிறுமியை யானை தாக்கியது. இதில் அவர் உயிரிழந்தார்.

மகளை காப்பாற்ற முனைந்த தந்தை யானை தாக்கியதில் படுகாயமடைந்தார்.

மேலதிக விசாரணைகளை அம்பாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 23 ஆயிரம் மருத்துவர்களின் இடமாற்றங்களில் சிக்கல்!

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஓக. 04

சுகாதார அமைச்சின் செயல்பாடுகளால் 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்களின் இடமாற்றங்களில் சிக்கல்கள் எழுந்துள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜயசிங்க கூறுகையில்,

சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைகள் பிரிவின் தன்னிச்சையான செயல்பாடுகள் காரணமாக இடமாற்றங்கள் தொடர்பில் சிக்கல்கள் இப்போது எழுந்துள்ளன.

இதன் விளைவாக, நாட்டில் சுமார் 23 ஆயிரம் மருத்துவர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக சிக்கல்கள் எழுந்துள்ளன. அத்துடன், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தர மருத்துவர்களின் இடமாற்றங்கள் செயல்படுத்தப்படவில்லை.

அத்துடன், நாட்டில் சுமார் 50 சதவீத மருத்துவர்கள் தற்போது அவர்களுக்கு உரிய மருதத்துவமனைகளில் பணியமர்த்தப்படவில்லை - என்றார். (ஐ)

## 2 இலட்சம் சுற்றுலாவிகள் ஜூலை மாதத்தில் வருகை

கொழும்பு, ஓக. 04

கடந்த ஜூலை மாதத்தில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2 இலட்சத்தைக் கடந்தது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின் படி, ஜூலை மாதத்தில் 2 இலட்சத்து 244 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இது 6.6 சதவீதம் அதிகமாகும்.

இதனிடையே, இந்தியாவிலிருந்து 37 ஆயிரத்து 128 சுற்றுலாவிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 23 ஆயிரத்து 475 பேரும் நெதர்லாந்திலிருந்து 15 ஆயிரத்து 556 பேரும் சீனாவிலிருந்து 12 ஆயிரத்து 982 பேரும், பிரான்ஸிலிருந்து 11 ஆயிரத்து 59 பேரும் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதனிடையே, ஜனவரி 01 முதல் ஜூலை 31 வரையான காலப்பகுதியில் இலங்கை வந்துள்ள சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 13 இலட்சத்து 68 ஆயிரத்து 288 ஆகும். (ஐ)

# ரூ. 65 ஆயிரம் சம்பளம் பெற்ற அதிகாரியிடம் 110 பேருந்துகள்

பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 04

ரூ. 65 ஆயிரம் சம்பளம் பெற்ற கேகாலை பேருந்து சாலையின் அத்தியட்சகரிடம் 110 பேருந்துகள் உள்ளன என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், கேகாலை பேருந்து சாலையில் அளவுக்கதிகமாக ஊழியர்கள் இருக்கின்றனர். மாதம் 65 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் ஒருவர் 110 பேருந்துகளுக்கு சொந்தக்காரர். அவர் மாதம் ஐந்து இலட்சம் ரூபாய் சம்பளம் வாங்கினால்தான் அது சாத்தியம். இவ்வாறே கேகாலை பேருந்து சாலை அழிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. மீளெழுப்ப ஐந்து வருடங்கள் தேவை. அரசாங்கம் 600 பேருந்துகளை கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளது. ஆனால், அவற்றை கொண்டுவருவது 2026 ஜூனில்தான் சாத்தியம்.

இலங்கை போக்குவரத்து சபை புற்றுநோய்போல் ஊழல் நிறைந்ததோடு அங்கு அவ்வாறான ஒரு கலாசாரமும் உருவாக்கப்பட்டுள்ளது. நாம் இதை மீட்பதற்கு பெரும் போராட்டம் நடத்துகின்றோம். ஒரு வருடத்தில் புதிதாக உருவாக்குவோம் - என்றார். (ஐ

## பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் பதவி நீக்கம்!

கொழும்பு, ஓக. 04

பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் நாயகம் பிரேமசிறி ரத்நாயக்கா அவரின் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதையடுத்து, பதில் ஆணையாளர் நாயகமாக அந்தத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளரான கசூன் வெல்லஹேவா நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது கடமைகளை முறையாகச் செய்யாத குற்றச்சாட்டின் பேரில் பிரேமசிறி ரத்நாயக்கவை பதவியில் இருந்து நீக்க அமைச்சரவை முடிவு செய்திருந்தது.

பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் நாயகமாக பணியாற்றிய பிரேமசிறி ரத்நாயக்க தனது கடமைகளை முறையாக செய்யாதமைக்காக புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தது. இந்த நிலையில், அமைச்சரவையின் அனுமதியுடன் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். (ஐ)

## வாகனங்களுக்கான கேள்வி அதிகமானால் மாற்று ஏற்பாடு

கொழும்பு, ஓக. 04

எதிர்வரும் மாதங்களில் அதிக வாகனங்களுக்குக் கேள்வி ஏற்பட்டால் - அவை வெளிநாட்டு இருப்புகளை பாதிக்குமாக இருந்தால் மாற்று ஏற்பாடுகளுக்கு செல்ல வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது.

அத்துடன், அடுத்த வரவு - செலவு திட்டத்தில் வாகன இறக்குமதி, வாகன நிதி வசதிகள்மீதான வரிகளை அதிகரிப்பது குறித்து நிதி அமைச்சு பரிசீலிக்க வேண்டியிருக்கும் - என்று திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த பெப்ரவரி மாதம் வாகன இறக்குமதி தொடர்பான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன. இதன் பின்னர் இறக்குமதியாளர்கள் 120 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள நாணயக் கடிதங்களைத் திறந்துள்ளனர்.

இவற்றில் 55 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள நாணயக் கடிதங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. மிகுதியானவை நிலுவையில் உள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

தற்சமயம் வெளிநாட்டு இருப்பு சுமார் 600 கோடி அமெரிக்க டொலராக உள்ளது. இந்த நிலையில், வாகன இறக்குமதி மூலம் வெளிநாட்டு இருப்பு பாதித்தால் அதற்கு எதிராக சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். கடந்த பெப்ரவரி தொடக்கம் தனிப்பட்ட பாவனைக்காக சுமார் 30,000 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன - என்றும் அந்த அதிகாரி கூறினார். (ஐ)

## பி. ஐ. என். இலக்கத்தின் செல்லுபடி காலம் நீடிப்பு

கொழும்பு, ஓக. 04

2024/2025 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரி வருமானங்களை சமர்ப்பிப்பதற்காக ஏற்கனவே வழங்கப்பட்ட தனிநபர் அடையாள இலக்கத்தின் (பி.ஐ.என்.) செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, அதன் செல்லுபடியாகும் காலம் எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதி வரை நீடிக்கப்படவுள்ளது.

## 5 கோடி ரூபாய் மோசடி; பேராசிரியர் கைதானார்

கொழும்பு, ஓக. 04

5.82 கோடி ரூபாய் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் பேராசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற மூத்த பேராசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர். சந்தேக நபர் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் குற்றப் புலனாய்வுத் துறையின் வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டார். அவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் கைது செய் யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு - பன்னிபிட்டியை சேர்ந்த 78 வயது நபராவார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org